தமிழ்நாடு இ பேப்பர்.காம்
தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு

www.panmugam.com

# பண்முகம்.com

இலவச இதழ்
மலர்-1 இதழ்-11
e-magazine




# நிழலை தேடியல்ல
# நிஜத்தை தேடி ஓடுகிறேன்

# இதை படிச்சுட்டு போங்க




**வேலு:** அந்த விமான விபத்து எப்படி நடந்தது ?

**பாபு:** யரோ ஒரு பாராசூட் வீரர் விமானம் பறந்துகிட்டு இருந்தப்ப குறுக்க நின்னு லிஃப்ட் கேட்டாராம் .. ..

❖❖❖

**கோபு:** ஓட்டப்பந்தயத்துல தங்க மெடல் வாங்கினா "ஊக்க மருந்து"ன்னு சொல்லி தடை செஞ்சிடுறாங்க. சரி கடைசில வந்தவங்களையும் ஏன் செக் பண்றாங்க?

**பாபு:** இவங்க ஏதாவது "தூக்க மருந்து" சாப்பிட்டு இருப்பாங்களோன்னுதான்.

❖❖❖

**கோபு:** தரையில தண்ணியாயிருக்கு பார்த்து நடந்து போங்க... ஒருக்கால் வழுக்கினாலும் வழுக்கும்

**பாபு:** ஒருக்கால் தான் வழுக்குமா ,,,, ரெண்டு காலும் வழுக்காதா .. .. ..?

❖❖❖

**நீதிபதி:** வீட்டுக்கு ரெய்ட் பண்ண வந்தவங்க கிட்ட "ஈ"ன்னு உங்க பல்லை காட்டினீங் களாமே?

**குற்றவாளி:** என் "சொத்தை"யெல்லாம் காட்டச் சொன்னாங்க... அதான்.

❖❖❖

**பாபு:** நம்ம ஃபைனான்ஸ் கம்பெனி முதலாளிக்கு பத்மஶ்ரீ பட்டம் தரப்போறாங்களாமே...

வேலு: நிஜமாவா?

**பாபு:** ஆமாம்... குல்லா போடாம எல்லோருடைய பணத்தையும் வட்டியோட திருப்பித் தர்றாரே.. சும்மாவா

❖❖❖

**தந்தை:** எக்ஸாம் ஹாலிலே தூங்கிட்டு வரேன்னு சொல்றியே, வெக்கமாயில்லை.

**மகன்:** நீங்கதானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க.

❖❖❖



# கோஹினூரின் வைரத்தின் கதை



கோஹினூர் என்பது புகழ் பெற்ற வைரம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆயினும் அதுகுறித்த சில சுவையான விபரங்களை இங்கே பார்ப்போம். கோஹ் இ நூர் என்றால் ஜோதியின் சிகரம் Mountain of Light என்று அர்த்தம். இது அவ்வளவு ஒளி பொருந்திய வைர மணிக்கல். அதற்கு கோஹினூர் என்ற பெயரைச் சூட்டியவர் பெர்ஸிய மன்னர் நாதிர் ஷா.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரா விலுள்ள கோல்கொண்டா சுரங்கத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்டது இந்த கோஹினூர் வைரம். அச்சமயத்தில் அதுவரை தோண்டி எடுக்கப்பட்ட வைரங்களில் இதுவே உலகின் மிகப்பெரிய வைரமாகும். இதன் எடை 186 கேரட் என்று கூறப் படுகிறது. ஆனால் 105.6 கேரட் தான் இதன் சரியான எடை என்று ஆபரண வல்லுநர்கள் கணிக்கிறார்கள்.

சரித்திரம் அறிந்த வரையில், முதன்முதலில் காக்கட்டீய வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களிடம் இந்த வைரம் இருந்ததாகத் தெரிகிறது. இதனை அவர்கள் தங்கள் குலதெய்வமான பத்ரகாளி அன்னையின் இடது கண்ணில் பொருத்தி வைத்திருந்தனர்.

அடுத்து 14 ஆம் நூற்றாண்டில் அலாவுத்தீன் கில்ஜியின் படையெடுப்பில் காக்கட்டீய அரசு வீழ்ந்தது. சாம்ராஜ்யம் கொள்ளையிடப்பட்டது. அது சமயம் கோஹினூர் வைரம் அவர்கள் வசமானது.

பின்னர் அது குவாலியர் மன்னரின் குடும்பத் துக்கு சென்று, ஹுமாயூன் கைக்கு வந்து, பாரசீக மன்னர் தாமஸ்ப் கைக்குப் போய், தட்சிணப் பீடபகுதியை ஆண்ட நிஜாம் ஷாவை அடைந்தது, அதைத் தொடர்ந்து 17 ஆம் நூற்றாண்டில் ஷாஜஹான் கைக்குப் போனது. அடுத்து வந்த காலகட்டங்களில் அது பலரின் கைகளுக்கு மாறி மாறி இறுதியாக ஹுமாயூன் அளித்த பரிசாக மாமன்னர் பாபரின் கைக்கு வந்து சேர்ந்தது.

கி. பி. 1739 ல் மொகலாயப் பேரரசர் முஹம்மது ஷாவை பெர்ஸிய மன்னர் நாதிர் ஷா தோற்கடித்து டெல்லியைக் கைப்பற்றினார். அவர் கோஹினூர் வைரத்தை தன்னோடு எடுத்துச் சென்றார். பின்பு ஒருகட்டத்தில் அது பஞ்சாப் மகாராஜா ரஞ்சித் சிங்கின் கருவூலத்துக்கு வந்து சேர்ந்தது.

கி. பி. 1849 ல் பஞ்சாப் மாகாணம் ஆங்கிலேயக்




கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆளுகைக்குள் வந்ததன் பின்னர் கோஹினூர் வைரம், சர். ஜான் லாரன்ஸ் என்ற பிரிட்டிஷ் உயர் அதிகாரியின் பாக்கெட்டுக்குப் போனது. அதை அவர் பீரோவில் வைத்ததை மறந்து விட்டார். ஆறு வாரங்களுக்குப் பிறகு ஞாபகம் வந்து அவசர அவசரமாக ஓடோடிச் சென்று பிரிட்டிஷ் அரசி விக்டோரியா மஹாராணியாருக்கு அதைப் பரிசாக வழங்கினார். இன்று கோஹினூர் வைரம் பிரிட்டிஷ் மகுடத்தில் ஒளி வீசும் ஆபரணமாகப் பொருத்தப்பட்டு டவர் ஆஃப் லண்டனில் கப் சிப்பென்று பாதுகாப்பாக அமர்ந்துள்ளது.



மேலும் சில விபரங்கள் :

வைரத்தின் மதிப்பை கேரட்டுகளில் மதிப்பிடுகிறார்கள்.

கேரட் என்பது வைரத்தின் எடையைக் குறிக்குமேயன்றி அதன் உருவ அமைப்பை size ஐக் குறிப்பதாகாது. அதாவது ஒரு கேரட் என்பது 200 மில்லிகிராம் (அல்லது 0.2 கிராம்) எடைக்கு சமமாகும். ஒரு கேரட் எடையுள்ள முழுதான ரவுண்ட் வைரம் ஒன்றின் சராசரி விலை இன்றைய மதிப்பில் 5225 யு. எஸ். டாலர் என்று சொல்கிறார்கள். இது இந்திய மதிப்பில் ரூபாய் 4,61,351 ஆகும். 105.6 கேரட் (அல்லது 22.12 கிராம்) எடை கொண்ட கோஹினூர் வைரத்தின் விலை சுமார் 20 பில்லியன் யு. எஸ். டாலராக மதிப்பிடப்படுகிறது. (ஒரு பில்லியன் என்பது 100 கோடி)

ஆனால் கோஹினூர் வைரத்தை அதன் வரலாற்று, கலாச்சார, புராதன முக்கியத்துவத்தின் அடிப்படையில் மதிப்பிட்டால், அதற்கான உண்மையான விலையை, மதிப்பை யாராலும் நிர்ணயிக்கவே முடியாது என்பதுதான் உண்மை. நமது இந்தியா இழந்துள்ள விலைமதிக்க முடியாத சொத்துக்கள் பலவற்றுள் கோஹினூர் வைரமும் ஒன்று. அதை மீட்டெடுக்க நமது அரசும் முயன்று வருகிறது. நெருங்கின பொருள் கைப்படுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**– கணபதி,**

பாளையங்கோட்டை

# பெரியவன் ஆனதும் நீ என்ன செய்ய போற...!!??



ஆசிரியர்: பெருசா ஆனதும் நீ என்ன செய்ய போற?

மாணவன்: கல்யாணம் செஞ்சிக்குவேன் சார்...

ஆசிரியர்: அத கேட்கலடா... நீ என்னவா ஆகப் போறே?

மாணவன்: மாப்பிள்ளையா ஆவேன் சார்...

ஆசிரியர்: முட்டாள்... பெருசா ஆனா பிறகு உங்க அப்பா அம்மாவுக்காக என்ன செய்வ...??

மாணவன்: வீட்டுக்கு ஒரு நல்ல மருமகளை கொண்டு வருவேன் சார்..

ஆசிரியர்: முண்டம்... உங்க அப்பா உன்கிட்ட என்ன எதிர்பாப்பார்?

மாணவன்: ஒரு பேரனோ பேத்தியோ சார்...

ஆசிரியர்: சுத்தம்... உருப்பட்ட மாதிரி தான்...




# பயன் அதிகம்

# பாதுகாப்பும் அவசியம்

புதுசா ஏதாவது வாங்கினா இந்த பாக்கெட் உள்ளே இருக்கும் தெரியுமா? அதை தெரியாமகூட கீழ போட்றாதீங்க.

கடைகளில் புதியதாக நாம் செருப்பு, பேக்குகள், புது துணிகள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் குறிப்பாக சூட்கேஸ்கள் போன்ற வற்றை வாங்குகின்ற பொழுது, இந்த வெள் ளை நிற சிறய பாக்கெட் போடப் பட்டிருக்கும்.

அதை சிறு வயதில் நாம் எடுக்கும்பாழுது, விஷம் அதைத் தொடக் கூடாது என்றுபெற்றோர்கள் சொல்லியிருப்பார்கள்.

புதிதாக வாங்கி வந்த பொருளை அவருக்குள் இருந்து பிரித்துவிட்டால் போதும் உடனே அந்த பாக்கெட்டை தூக்கி கீழே வீசிவிடுவோம். ஆனால் அந்த பாக்கெட்டுக்குள் இருக்கும் சிலிக்கான் ஜெல்லை நாம் கீழே தூக்கிப் போடுவதற்கான நமக்குக் கொடுக்கப்படுவது இல்லை. அது நம்முடைய வீட்டில் வேறு என்னென்ன மாதிரயான விஷயங்களுக்கு எல்லாம் பயன்படுகிறது என்று தெரியுமா உங்களுக்குஞ் இனியாவது தெரிஞ்சிக் கோங்க அதை தூக்கி கீழே வீசிடாதங்கஞ்

புதுசா ஏதாவது வாங்கினா இந்த பாக் கெட் உள்ளே இருக்கும் தெரியுமா? தெரியாமகூட கீழ போட்றாதீங்க




## சமையல் அறையில்

பொதுவாகவே வீட்டில் சமையலறைதான் எப்போதுமே அதிகஈரப் பதத்துடன் இருக்கும்.

அதனால் தான் நாம் வைத்திருக்கிற மசாலாப் பொருட்கள், சர்க்கரை போன்றவை கெட்டியாகிவிடுவது, நமத்துப் போவது போன்ற பிரச்சினைகள் உண்டாகின்றன. அப்படி மசாலாப் பொருட்கள் கெட்டிப்பட்டுவிடாமல் இருக்க இந்த சிலிக்கான் ஜெல்லை பயன்படுத்த




முடியும்.

ஆம்.

நாம் மசாலாப் பொருட்கள் வைத்திருக்கும் இடத்துக்கு அருகில் சிலிக்கான் ஜெல் பாக்கெட்டை ஒரு ஸ்டிக்கர் மூலம் ஒட்டி வைத்தால் போதும். சமையலறையில் இருக்கின்ற ஈரப் பதத்தை இந்த சிலிக்கான் ஜெல் உறிஞ்சிக் கொள்ளும். எப்போதும் சமையலறைப் பொருள்கள் பிரஷ்ஷாகவே இருக்கும்.

## மொபைல் நீரில் விழுந்தால்

செல்போன் வைத்திருக்கும் எல்லோருக்குமே இந்த பிரச்சினை அடிக்கடி நிகழ்வதுதான். அதுதாங்கஞ் செல்போனை தண்ணிக்குள்ள போட்றது.

நாம் எதிர்பாராத விதமாக தண்ணீருக்குள் போடுகின்ற மொபைல் போனை அதன் பேட்டரி, மெமரி கார்டு போன்றவற்றைக் கழட்டிவிட்டு, ஒரு கிண்ணத்தில் இந்த சிலிக்கான் ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு அதற்குள் ஈரமான பு□னை போட்டு வைத்தாலே போதும், அதற்குள் இருக்கிற ஈரத்தை உறிஞ்சிவிட்டு, மொபைலை புதுசுபோல் மாற்றிவிடும். ஆனால் ஜார்ஜ் போடுவதற்கு முன்பு அதை காற்றோட்டமாக ஒரு நாள் வைத்திருந்துவிட்டு பின் சார்ஜரில் இணைப்பது நல்லது.



## ஆவணங்கள்:

வீட்டில் இருக்கின்ற முக்கியமான ஆவணங்கள், பத்திரங்கள், சான்றிதழ்கள், ஆதார் கார்டுகள் போன்றவை வீணாகிப் போய்விடாமல் செல்லரித்து விடாமல் அப்படியே இருக்க வேண்டுமென்றால் இந்த சிலிக்கான் ஜெல் பாக்கெட்டுகளை எடுத்து இந்த ஆவணங்களை வைத்திருக்கும் பெட்டியிலோ பையிலோ போட்டு வைத்திருங்கள்.

## துணிகள் காயவைக்க:

நாம் துவைத்து முடித்த ஈரமான துண்டோ அல்லது மற்ற துணி வகைகளோ உடனடியாக உலர்த்த வேண்டும் என்று நினைத்தால் உங்களுக்கு இந்த சிலிக்கான் ஜெல் பெரிதும் உதவிசெய்யும்.

ஒரு பக்கெட்டில் இந்த சிலிக்கான் ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு துணிகளைப் போட்டு அதில் ஊறவைத்தால் போதும் துணிகள் உடனடியாக காய்ந்துவிடும்.

## கத்தி கூர்மையாக:

பொதுவாக நாம் தினமும் பயன்படுத்துகின்ற கத்தி, ரேசர்கள், பிளேடுகள் ஈரப்பதத்தால் வேகமாகவே மழுங்கிப் போய்விடும். அப்படி மழுங்கிப் போகாமல் கூர்மையாகவே இருக்க வேண்டுமென்றால், கத்தியெல்லாம் போட்டு வைத்திருக்கின்ற டப்பாக்களில் இந்த சிலிக்கான்

ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு வைத்தால் கத்திகள் மழுங்கிப் போய்விடாமல் இருக்கும்.

## துர்நாற்றம்:

எப்போதாவது பயன்படுத்துகிற பொருட்கள், உடற்பயிற்சி சம்பந்தப்பட்ட பொருள்கள், விளையாட்டுப் பொருட்கள் போட்டுவைக்கும் கவர்கள் ஆகியவற்றில் எப்போதும் ஒருவித துர்நாற்றம் வீசும். அப்படி துர்நாற்றம் வீசாமல் இருக்க இந்த சிலிக்காள் ஜெல் பாக்கெட்டுக்களை அதற்குள் போட்டு வையுங்கள். துர்நாற்றமும் வீசாது. பொருட்களும் புதுசுபோலவே பளபளக்கும்.

## வளர்ப்பு பிராணிகள்:

நம்முடைய வீடுகளில் வளர்ப்பு பிராணிகளுக்கு பிஸ்கட்டுகள் மற்றும் வேறு சில உணவுகளை கவர்களில் வைத்திருப்போம். அவற்றைநம்முடையஉணவைப்போலசுகாதாரமாக வைத்திருக்க முயந்சி செய்வதில்லை. அதனால் வேகமாகக் கெட்டுப்போய்விடும். அதை தவிர்க்க வேண்டுமென்றால் அந்த உணவு கவர்களில் சிலிக்கான் ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு வையுங்கள்.

## நகைகள்:

பொதுவாக நாம் வைத்திருக்கும் நகைகளை தினமும் பயன்படுத்துவது கிடையாது. அப்படியே பெட்டிக்குள் பூட்டி வைத்திருப்போம். அது நாளடைவில் மங்கிவிடுவது போன்று தோன்றும். இதுவே அந்த நகைப் பெட்டிக்குள் சில சிலிக்கான் ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு வைத்திருந்தால் நகை பதுசு போல் அதே பளபளப்புடன் இருக்கும்.

## அலங்காரப் பொருட்கள்:

வீட்டில் சில முக்கிய தினங்களன்று மட்டும் தான் அலங்காரங்கள், தோரணங்கள் போன்றவற்றைத் தொங்கவிடுவோம். முடிந்ததும் அந்த பொருட்களில் சிலவற்றை அடுத்த ஆண்டு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அட்டைப் பெட்டிக்குள் போட்டு வைத்திருப்போம். அடுத்த வருடம் எடுத்துப் பார்த்தால் அதன் நிறங்கள் மங்கியிருக்கும். இதுவே சிலிக்காள் ஜெல் பாக்கெட்டுக்களைப் போட்டு வைத்தால் நிறம் மங்காமல் புதுசுபோலவே இருக்கும்.

## ஜன்னல்கள்:

நம்முடைய வீட்டின் ஜன்னல்கள், வாயிற்படி போன்ற ஈரத்தை உறிஞ்சும் மர வேலைப்பாடுகள்




கொண்ட பகுதிகளில் குழந்தைகளுக்கு எட்டாத வகையில் சிலிக்கான் ஜெல்லை கட்டி வைத்திருந்தால் தேவையில்லாமல் ஜன்னலில் ஈரப்பதம் அடையாமல் காக்க முடியும்.

## ஷூ துர்நாற்றம்:

பொதுவாக எல்லா வீடுகளிலும் நாம் எல்லோரும் சந்திக்கிற பிரச்சினை இது. என்னதான் துவைத்து பயன்படுத்தினாலும் ஷூக்கள், சாக்ஸ்களில் துர்நாற்றங்கள் ஏற்பட்டு விடுகிறது. அப்படி உண்டாகாமல் இருக்க செருப்புகள் வைக்கும் இடங்களில் இந்த சிலிக்கான் ஜெல்லைப் போட்டு வைத்திருந்தால் அந்த துர்நாற்றங்களில் இருந்து விடுபட முடியும

இவ்வாறு பல்வேறு விதங்களில் இந்த சிலிக்கான் ஜெல் பயன்படும். ஆனால் ஒருபோதும் இதை அதனுடைய பாக்கெட்டுகளில் இருந்து பிரித்து வெளியே எடுத்துப் பயன்படுத்திவிடக் கூடாது. பாக்கெட்டுகளை அப்படியே தான் பயன்படுத்த வேண்டும்.

இந்த பாக்கெட்டுகளை ஒரு போதும் ஓபன் செய்து உபயோகித்துவிடாதீர்கள். கவனம்.

– லால்குடி வெ நாராயணன்

# ஜன்னல்

ஒரு பஸ்ஸில் ஜன்னலோர சீட்டில் இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

பஸ் போய்க் கொண்டிருந்தது. அதில் ஒரு பெண் "யோவ் கண்டக்டர் இங்கே வாய்யா... இந்த ஜன்னலக் கொஞ்சம் திறந்து வைத்து விட்டுப் போ" என்றாள்.

கண்டக்டர் வந்து ஜன்னலை திறந்து வைத்து விட்டுப் போனார். அந்தப் பெண்ணுக்கு அடுத்து உட்கார்ந்திருந்த பெண் "யோவ் கண்டக்டர் இங்கே வாய்யா... வந்து இந்த ஜன்னலை சாத்தி விட்டுப் போய்யா" என்றாள்.

கண்டக்டர் வந்து "என்னம்மா அந்தம்மா ஜன்னலை திறந்து வைக்கச் சொல்லுது நீங்க ஜன்னலை சாத்தி வைக்கச் சொல்றீங்க கொஞ்ச நேரம் அட்ஜஸ்ட் பண்ணி பிரயாணம் பண்ணக் கூடாதா?" என்று கேட்டார்.

அதற்கு முதல் பெண் சொன்னாள் "இங்கே பாரு நீ ஜன்னல அடைச்சன்னா நான் மூச்சு முட்டி செ`த்துப் போவேன்" என்றாள்.

இரண்டாவது பெண் "இங்கே பாரு நீ ஜன்னல திறந்து வச்சின்னா நான் குளிர்ல விறைச்சி செத்துப் போவேன்"னாள்.

கண்டக்டர் என்ன செய்றதுன்னு திகைச்சி நின்னுகிட்டிருந்தப்ப, கடைசி சீட்டில் பீடி குடிச்சி கிட்டிருந்த ஒரு மனுசன் கண்டக்டரை கூப்பிட்டு "அங்கே என்ன பிரச்னை" என்று கேட்டான்.

கண்டக்டர் சொன்னார் "அதை ஏன் கேட்கிற ஒரு அம்மா ஜன்னல அடைச்சா மூச்சு முட்டி செத்துப் போவேன்ங்குது. இன்னொரு அம்மா ஜன்னல திறந்து வச்சா குளிர்ல விறைச்சி செ`த்து போவேங்குது. ஒருத் தருக்கு ஒருத்தர் அட்ஜஸ்ட் பண்ணிப் போகக் கூடாதா கொஞ்ச நேரத்தில் இறங்கப் போறாங்க அதுக்குள்ள இப்படி சண்டை போட்டுகிட்டா என்ன செய்றது".

அந்த மனுசன் "நான் ஒரு யோசனை சொல்லவா?" என்று கேட்டான்.

கண்டக்டர் "சரி சொல்லுய்யா நீ என்ன சொல்லப் போறேன்னு பார்ப்போம்" என்றார்.

அவன் சொன்னான் "கொஞ்ச நேரம் ஜன்னலை அடைச்சி வை, அந்த அம்மா செ`த்துப் போகும், அப்புறம் கொஞ்ச நேரம் ஜன்னலை திறந்து வை இந்தம்மா செ`த்துப் போகும் நாம நிம்மதியா போகலாம்" என்றான்.

கண்டக்டர் சொன்னார் "நல்ல ஆளுய்யா நீ அப்படி அவங்க ரெண்டு பேரும் செ`த்துப் போனா அந்தப் பொம்பளைகளோட புருசங்க வந்து கேட்டா நான் என்னய்யா பதில் சொல்றது"ன்னு கேட்டார்.

அதற்கு அவன் சொன்னான் "அதைப் பத்தி நீ கவலைப் படாதே அந்த ரெண்டு பொம்பளைகளோட புருசன் நான் தான்.. அதனால தான் அந்த யோசனையை சொன்னேன்" என்றான்.

கண்டக்டர்: ???

– தென்கச்சி கோ.சுவாமிநாதன் பேச்சிலிருந்து...





# எந்த பூக்களை தலையில் வைத்தால் என்ன பயன்

பெண்கள் பூ வைப்பது பற்றி அறிய வேண்டியவை குழந்தைக்கு ஒரு வயதாகும் வரையில் தலையில் பூ வைக்கக்கூடாது.

அதேபோல் ஒரு பெண் வைத்துக் கொண்ட பூவை இன்னொருவர் வைத்துக்கொள்ளக்கூடாது.

எந்த பூக்களை எவ்வளவு நேரம் வைக்கலாம்?

முல்லைப்பூ 18 மணி நேரம்,

அல்லிப்பூ 3 நாட்கள் வரை,

தாழம்பூ 5 நாட்கள் வரை,

ரோஜாப்பூ 2 நாட்கள் வரை,

மல்லிகைப்பூ அரை நாள் வரை,

செண்பகப்பூ 15 நாள்கள் வரை,

சந்தனப்பூ 1 நாள் மட்டும்,

மகிழம்பூ மற்றும் குருக்கத்திப் பூ சாப்பிடும் போது மட்டும் வைத்துகொள்ளலாம்.

மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, மாசிப்பூ இந்தப் பூக்களின் வாசம் இருக்கும் வரை மட்டும் வைத்துகொள்ளலாம்.

### பூ வைப்பதால் என்னென்ன பயன்கள் கிடைக்கும்?

ரோஜாப்பூ தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மல்லிகைப்பூ மனஅமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.

செண்பகப்பூ வாதத்தைக் குணப்படுத்தும். பார்வைத் திறனை மேம்படுத்தும்.

பாதிரிப்பூ காது கோளாறுகளைக் குணப்படுத்தும். செரிமானச் சக்தியை மேம்படுத்தும். காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைச் சரி செய்யும்.

## செம்பருத்திப் பூ

தலைமுடி தொடர்பான பிரச்னைகளை சரி செய்யும்.

உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.

## மகிழம்பூ

தலை சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும்.

## வில்வப்பூ

சுவாசத்தைச் சீராக்கும். காச நோயைக் குணப்படுத்தும்.

## சித்தகத்திப்பூ

தலைவலியைக் குறைக்கும்.மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும்.

## தாழம்பூ

நறுமணம் வீசுவதோடு சீரானதூக்கத்துக்கு உதவும். உடல் சோர்வை நீக்கும்.

## தாமரைப்பூ

தலை எரிச்சல், தலை சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும்.

மனஉளைச்சலை நீக்கி மனஅமைதிக்கு வழிவகுக்கும். தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும்.

## கனகாம்பரம்பூ

தலை வலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும்.

தாழம்பூ, மகிழம்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ செண்பகப்பூ போன்றவை வாதம், கபத்தைக் குறைக்கக் கூடியவை.

## பூக்களை சூட வேண்டிய முறை:

பூக்களைக் காதின் மேல் மற்றும் கீழ் நுனியின் இடைவெளியில் சூடவேண்டும்.

உச்சந்தலையிலோ, கழுத்துப் பகுதியிலோ பூக்கள் தொங்கும்படி சூடக் கூடாது.

மணமுள்ள பூக்களை வாசனையில்லாதப் பூக்களுடன் சேர்த்துச் சூடக்கூடாது.

அது கூந்தல் வளர்ச்சியைக் குறைக்கும்.

ஜாதி மல்லிகைப்பூ, செவ்வந்திப்பூ, குடசப்பாலைப்பூ, பாதிரிப்பூ, மகிழம்பூ, செண்பகப்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ போன்றவற்றைக் கனகாம் பரத்துடன் சேர்த்துச் சூடினால் மிகவும் நல்லது.

மந்தாரை, தாமரை, செவ்வரளி, கருங்குவளைப்பூ போன்றவற்றுடன்கற்பூரத்துடன் சேர்த்துச் சூடினால் மனம் அமைதி பெற உதவும்.

மல்லிகைப்பூவை குளிப்பதற்கு முன் சூட வேண்டும்.

முல்லைப்பூ, வில்வப்பூவை குளித்த பின்பு சூடலாம்.

உடலில் எண்ணெய் தேய்க்கும் போது தாழம்பூ சூடலாம்.

திரி தோஷத்தை சமன்செய்யும் பூக்களை எப்போதும் சூட வேண்டும்?.

குளிச்சியான காலத்தில் உஷ்ணமான பூக்களையும், உஷ்ணமான காலத்தில் குளிர்ச்சியான பூக்களையும் சூட வேண்டும்.

மழைக் காலத்தில் கேசத்துக்கும், கண்ணுக்கும் நன்மை தரும் பூக்களைச் சூட வேண்டும். பாதிரிப்பூ, மல்லிகைப்பூ சூடலாம்.





சூடப்படும் பூ தலையில் மட்டுமே இருக்கும்படி சூடவேண்டும்.

எப்போதும் தோள்பட்டையிலும் முதுகுப் பகுதியிலும் படாமல் இருக்குமாறு பூக்களைச் சூட வேண்டும்.

துளசி, மரிக்கொழுந்து மற்றும் செவ்வரளி போன்றவற்றை ஒன் றாகச் சேர்த்துச் சூடலாம்.

தலையில் உள்ள ஈறு பேன் போன்றவற்றை நீக்கும். கூந்தலுக்கு நல்ல மணத்தைக் கொடுக்கும்.



கனகாம்பரம் அல்லது ரோஜாவை மாலையாக நம் மார்பில் அணிவதால், இதயம் நலம் பெறும். உடல் முழுவதும் ஒருவித சிலிர்ப்பைத் தருவதோடு மகிழ்ச்சியை உண்டாக்கும்.

காகிதப்பூக்கள், பிளாஸ்டிக் பூக்களைத் தலையில் சூடக்கூடாது.

ஒற்றை மலராக எந்த வகைப் பூவையும் வைக்கக் கூடாது.

பூக்களைச் சூடுவதால் ஏற்படும் நன்மைகள்:

பூக்களில் உள்ள பிராண ஆற்றல், மூளைச் செல்களால் ஈர்க்கப்பட்டு, நாளமுள்ள மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் சீரான இயக்கத்துக்கு உதவுகிறது.

இந்தப் பிராண ஆற்றலானது மனஅழுத்தத் தைக் குறைத்து, மனஅமைதிக்கு உதவுகிறது.

தலையில் பூ வைப்பது, மனமாற்றத்துக்கு உதவும். ஒரு விஷயத்தைப் பல கோணங்களில் பார்க்கும் தன்மையைக் கொடுக்கும்.

மனஅழுத்தத்தால் ஏற்படும் செல் இழப் பைத் தடுக்கிறது. பூவின் மணமானது உடல் செல்களுக்குப் புத்துணர்வை அளிக்கிறது. மன மாற்றத்துக்கு உதவுகிறது. மனஅழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மகிழ்ச்சியை உண்டாக்கு கிறது.

நம்மைச் சுற்றியுள்ளவற்றைக் கவனிக்கும் சக்தியை அதிகரிக்கும்.

இயற்கையாக இறைவன் அளித்துள்ள பூக்களை பெண்கள் அழகுற வைப்பது கண வனை ஈர்ப்பதோடு மட்டுமன்றி பெண்களின் உடல்நலத்திற்கும் நன்மை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

– அருணாச்சலம்

தினமும் புதிய புதிய
இசை வீடியோக்கள்
ஆன்மிக பாடல்கள்
சுவையான சமையல்
வீடியோக்களை
வெளியிடும்

dheivamtv.com

இணையதளத்தை பார்க்கவும்

வாட்சப் மற்றும் தொலைபேசி எண்
7789941009



# சுற்றுலா படையெடுப்போம்
# செஞ்சி கோட்டைக்கு

விழுப்புரம் மாவட்டத்தின் சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது செஞ்சி கோட்டை. வரலாற்றுப் புகழ் பெற்ற இந்தக் கோட்டை குறித்த பத்து சுவாரசியமான தகவல்களை இந்தப் பதிவில் காணலாம்.

சோழர் காலத்தில், 'சிங்கபுரி' என்றழைக்கப்பட்டது செஞ்சி. இதுவே திரிந்து செஞ்சி என்று ஆனது. சோழர்கள் பலவீனம் அடைந்தபின் ஆனந்தகோன் என்ற குறுநில மன்னர் கோனார் வம்ச ஆட்சியை செஞ்சியில் 13ம் நூற்றாண்டில் நிறுவினார்.

அதைத் தொடர்ந்து 13ம் நூற்றாண்டிலேயே கோன் சமூக ராஜவம்சத்தால் இந்தக் கோட்டை கட்டப்பட்டது. ஆனந்த கோன் எனும் அரசரால்









கட்டப்பட்டு, பின்னர் கிருஷ்ண கோன் எனும் அரசரால் விரிவுபடுத்தப்பட்டது. இந்தக் கோட்டை மூன்று மலைகளை அரணாகக் கொண்டு, சுமார் 13 கிலோ மீட்டர் சுற்றளவைக் கொண்டு, மிகப்பெரிய அரணாக விளங்கியது. செஞ்சி கோட்டை மட்டும் 11 சதுர கிலோ மீட்டர் பரப் பளவைக் கொண்டு அமைந்திருக்கிறது.

செஞ்சி கோட்டை சத்ரபதி சிவாஜியால், ‘இந்தியாவின் தலைசிறந்த உட்புக முடியாத கோட்டை’ என்று பாராட்டப்பட்டது. ஆங்கி லேயர் கள் இந்தக் கோட்டையை, ‘கிழக்கின் ட்ராய்’ என்று அழைத்தனர்.

வீர சிவாஜியின் கூற்றுக்கிணங்க, 1690 முதல் 1697ம் ஆண்டு வரை, மாபெரும் முகலாயர்கள் படை இந்தக் கோட்டையை முற்றுகையிட்டபோதும், கிட்டத்தட்ட 3000 நாட்கள் அவர்களால் உட்புக முடியவில்லை. வீர சிவாஜியின் இளைய மகன் ராஜாராம் இங்கு தங்கி இருந்து, பின்னர் தப்பித்து மகாராஷ்டிரா சென்று மன்னனாகப் பதவி ஏற்றார். எனவே, மராத்தியர்களுக்கு இது ஒரு புகலிடமாக விளங்கியது.

மராத்தியர்களிடமிருந்து 1698ல் முகலாயர்வசம் சென்ற பின்னர் முகலாயர்கள் சார்பில் படைத்தளபதி ஸ்வரூப் சிங் இந்தக் கோட்டையை ஆண்டு வந்தார். அவருக்குக் கப்பத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் 1714ம் ஆண்டு அவரது மகன் ராஜா தேசிங்கு பட்டத்துக்கு வந்தார். அவரிடம் ஆற்காட்டு நவாப் கப்பம் செலுத்துமாறு கேட்க, போர் மூண்டது. 80,000 குதிரைகளைக் கொண்ட நவாப் படையை ஆயிரத்துக்கும் குறைவான குதிரை வீரர்கள் கொண்ட சிறிய படை மோதி, ராஜா தேசிங்கு வீர மரணம் அடைந்தார். இது இன்றும் நாட்டுப்புறப் பாடல்களில் சிறப்பித்துப் பாடப்படுகிறது.

எட்டு மாடிகளைக் கொண்ட கல்யாண மஹால், நெற்களஞ்சியம், படை வீரர்கள் பயிற்சிக் கூடம், சிறைச்சாலை, செஞ்சியம்மன் கோயில், குளம் என பலவற்றை உள்ளடக்கியது இந்தக் கோட்டை.

இங்கிருந்த அருமையான நீர் மேலாண்மை, பெரும் படையெடுப்புகளை தைரியமாகக் கையாள உதவியது.

இந்தக் கோட்டை நாயக்கர்கள், பீஜப்பூர் சுல்தான், மராத்தியர்கள், முகலாயர்கள், ஆற்காடு நவாப், பிரஞ்சு படை, ஆங்கிலேயர்கள் என்று பல்வேறு அரச வம்சங்களுக்கு மாறிய பின்னர், ஹைதர் அலிக்கு சொந்தமாக இருந்து, பின்னர் கடைசியில் ஆங்கிலேயர் வசம் வந்தது. ஆங்கிலேயர்கள் இதனை முக்கியமான கோட்டையாகப் பயன்படுத்தவில்லை. அதனால் அது, தனது முக்கியத்துவத்தை இழந்தது.

விஜயநகர நாயக்கர்கள் தமிழ்நாட்டில் மூன்று




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# மீம்ஸ் கலாட்டா


படம் பேர் தெரில//
இந்த சீன்ல நமிதா திருவிழால விக்கிற பொம்ம ஃபோன்ல பேசுவாங்க
எல்லாம் நமிதாவ தான் பாப்பாங்க ஃபோன பாக்க மாட்டாங்கனு நெனச்சு இந்த சீன வச்சுட்டாங்களோ என்னமோ
Blazzy Rajesh


அலுவலகம் எதிரே வாகனம் நிறுத்தாதீர் !
அருகில் பஞ்சர் கடை இல்லை


She : எனக்காக ஒரு கவிதை சொல்லு டா..
Me : என் இதயம் எனும் வண்டலூர் பூங்காவில் குடியிருக்கும் குரங்கு நீ..
She :




www.dheivam.com

தெய்வம்

இலவச இதழ்

தெய்வீக தேடலின் ஒளிவிளக்கு

இ-புத்தகம் மற்றும் யூ-டியூப் சேனலுக்கு
எழுத்தாளர்கள், செய்தி சேகரிப்பாளர்கள்
தொடர் எழுதுவோர் தேவை
விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**Dheivam.com**

**HIG 215, K6, KALINGAVIHAR,**
**BHUBANESWAR, ODISHA - 751 019.**

தொடர்பு கொள்ளவும்

**7789941009**



# அழகைப் பார்த்து ஏமாந்த மீன்!!



இயற்கை எழில் நிறைந்த அழகான ஊர் தான் புதூர். அங்கு ஏரி, குளங்கள் என நீர் நிலைகள் நிறைந்திருக்கும். அங்குள்ள ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. அக்குளத்தில் உள்ள மீன் குட்டிகள் எப்பொழுதும் கூட்டமாக விளையாடிக் கொண்டிருக்கும்.

அதில் ஜானி, பட்டு என்ற இரு குட்டி மீன்கள் விளையாடிக் கொண்டிருந்தன. ஜானி, ஏய்! பட்டு எங்கே என்னைப் பிடி பார்க்கலாம் என்றது. அதற்கு பட்டு, என்னிடமே சவால் விடுகிறாயா? இப்பொழுது பார். ஒரு நொடியில் உன்னை பிடிக்கிறேன் என்று கூறி விளையாடிக் கொண்டே கரையோரம் வந்தன.

அச்சமயம் கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்து, 'ஏய் ஜானி, அங்கே பார் அவன் எவ்வளவு கருப்பாக இருக்கிறான்." மேலும் அவன் குரலை நீ கேட்டிருக்கிறாயா? அருவருப்பாக இருக்கும். அவனை பார்த்தாலே பயமாக இருக்கிறது. வா! ஜானி நாம் உள்ளே சென்று விடலாம் என்று கூறியதும், எல்லா மீன்களும் குளத்திற்குள் வேகமாக சென்றுவிட்டன.

வேக வேகமாக மீன்கள் உள்ளே சென்றபோது, குட்டிகளா! ஏன் இப்படி அவசரமாக ஓடி வருகிறீர்கள்?



பன்முகம் .com www.panmugam.com



என்று அங்குள்ள ஒரு பெரிய மீன் கேட்டது. கரையோரத்தில் ஒரு காகம் இருக்கிறது. அக்காகத்தின் நிறம் மற்றும் குரலைக் கேட்டால் பயமாக இருக்கிறது. அதனால்தான் வேகமாக ஓடி வந்தோம் என்றது, பட்டு.

அதற்கு அந்த பெரிய மீன் காகத்தால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றது. 'உருவத்தை மட்டுமே வைத்து ஒருவரைப்பற்றி தவறாக நினைக்கக்கூடாது" என்று பெரிய மீன் கூறியது. மற்ற மீன்குட்டிகள் இந்த தாத்தாவுக்கு வேறு வேலையே இல்லை. எப்பொழுதுமே உபதேசம் தான் என்று கூறிவிட்டு சென்றன.

தினமும் காகத்தைப் பார்த்து கரைக்குச் செல்லாமல் குளத்தினுள்ளேயே விளையாடிக் கொண்டிருந்தன, மீன்கள். சில நாட்களுக்குப் பிறகு குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்திருந்தது.

அதை பார்த்த மீன் குஞ்சுகள், ஏய்! அங்கே பாருங்கள். வெள்ளை நிறத்தில் எவ்வளவு அழகாக இருக்கிறது. அதன் அலகு நீளமாக மட்டுமில்லாமல் கூர்மையாகவும் உள்ளதே! அதனுடைய நடையைப் பார் என்று கொக்குவை வர்ணித்துக் கொண்டிருந்தது.

மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது, கொக்கு. உடனே மீன் குட்டிகள் கொக்குவைப் பார்த்து நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள், உங்களது அலகை தொட்டுப் பார்க்கலாமா? என்று ஒரு மீன் குட்டி கேட்டது.

அக்குட்டிமீன் அவ்வாறு கேட் டதும் கொக்கு மகிழ்ச்சியில் மூழ் கியது. உடனே, கொக்கு தொட்டுப் பார் என்று கூறியது. ஒரு மீன் குட்டி கொக்கிடம் சென்றதும், கொக்கு அந்த மீனை கவ்விக் கொண்டது. நன்றாக மாட்டிக் கொண்டாயா? என்றது.

கொக்கிடம் மாட்டிய மீன் ஆ! என்னை விட்டுவிடுங்கள்! என்று கெஞ்சியது. இதை பார்த்த மற்ற மீன் குட்டிகள் ஆபத்து ஆபத்து வேகமாக ஓடுங்கள் என்று அனைத்து மீன்களும் குளத்திற்குள் சென்றன. ஆனால், அந்த கொக்கு கவ்விய மீனுடன் வானத்தில் சென்று மறைந்தது. மற்ற மீன் குட்டிகள் அந்த தாத்தா மீன் சொன்னது சரிதான்.



அழகை மட்டும் பார்த்து ஒருவருடன் பார்க் கக் கூடாது என்று அனைத்து மீன்களும் உறுதி யெடுத்துக் கொண்டன. அன்று முதல் அனைத்து மீன் குட்டிகளும் கவனமாக இருந்தன. மகிழ்ச்சியாக குளத்தில் வாழ்ந்து வந்தன.

நீதி: அழகற்று இருப்பது எல்லாம் தீயதுமல்ல. அழகாக இருப்பது எல்லாம் நல்லதுமல்ல.

**- A s Govinda rajan**
Kodambakkam Chennai



# வெயிலோடு உறவாடு...

கிழக்கு வெளுத்ததம்மா கீழ்வானம்
சிவந்ததம்மா கதிரவன் வரவு
கண்டு கமலமுகம் விரிந்ததம்மா !

திரைப்படத்தில் வரும் அருமையான பாடல் ஒன்று!

இருள் கழிந்து வெளிச்சம் ஏற்படுவதைக் குறிக்கும் பாடல் !

இருட்டும் பகலும் மாறி மாறி வருவது இயற்கையின் அற்புத விளையாட்டு ! இருட்டு மட்டுமே இருந்துவிட்டால் உலகம் செழிக்காது. அதைப்போல் பகல் மட்டுமே இருந்தால் சரியான இயக்கம் இருக்காது.

www.panmugam.com பண்முகம்

வெயிலை நம்பி நாம்செயல்படுவதில் நமக்கு விஞ்ஞான ரீதியாக நிறைய அனுகூலங்கள் உண்டு. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதால் நிறம் மட்டும் விருத்தியடையும். சுறு சுறுப்பு இருக்காது. காலை மாலை நம் உடல் வெயிலில் படும்பொழுது வைட்டமின் டி சுரக்க ஏதுவாகிறது. வெயில்



காலத்தில் வேர்வைச் சுரப்பிகள் நன்கு வேலை செய்து உடலில் உள்ள தேவையற்ற உப்பை வேர்வையாக வெளியேற்றுகிறது. அதனால் நம் சிறுநீரகத்தின் பளு குறைகிறது.

நான் படிக்கும் காலத்தில் தினமும் வீட்டின் பின்னால் கொஞ்சம் தள்ளி உள்ள பம்ப் செட்டிற்குநண்பர்களுடன் செல்வேன். மோட்டார்ஓடிக்கொண்டிருக்கும்.

ஒவ்வொருவராக ஏறி தொட்டிக் குள் இறங்கி குளிப் போம். நல்ல வெயில் காலத்தில் பம்ப் செட் குளி யல் உடலுக்கு சுகமாய் இருக்கும். நேரம் போவது தெரியா மல்குளித் துக்கொண்டிருக்கும்பொழுத மோட்டரை அணைத்துவிடுவர்..' தம்பிகளா..குளிச்சது போதும் கிளம்புங்க ' என்ற வார்த்தை வந்த வுடன் கிளம்ப மனசில்லாமல் அந்த இடத்தைவிட்டு அகலுவோம். நல்ல மனுஷர். இப்படிக்குளிக்க அனுமதி கொடுக்கிறாரே அதுவே போதும் என்ற நிம்மதியுடன் புறப்படுவோம்.

உடலில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஈரம்

அடுத்த சில நொடிகளில் காணாமல்

போகும். அந்த அளவுக்கு சுரீர் என்று

வெயில் அடிக்கும்.



அடுத்து தோட்டம் வழியாக நடக்கும் பொழுது கொடுக்காப்புளி பழங்களை கல்லால் அடித்து கீழே விழுவதை எடுத்து உண்போம். அதன் உவர்ப்பு கலந்த தித்திப்பு ஒரு அலாதியான சுவைதான் !

சிலநாட்கள் பம்ப் செட் ஷெட் மூடியி ருக்கும். குளிக்கமுடியாதஏக்கம் அன்றுபூராகவும்இருக்கும். அதனால் கொடுக்காப்புளி சீண்டப்படாமலும் மரத்தில தொங்கிக்கொண்டிருந்தது.

வெயிலில் சென்று பம்ப் செட்டில் குளி த்து மறுபடியும் வெயிலில் திரும்பும் அந்த சுகம் மீண்டும் கிடைக்காதா என்ற ஏக்கம் அடிக்கடி ஏற்படுவது ண்டு.

காலம் மாறிவிட்டது.இன்று அங்கு பம்ப் செட் இல்லை. நிலங்களும் கிடையாது. வானுயர குடியிருப்புக் கட்டிடங்கள்தான்இருக் கின்றன. அந்த இடத்தை கடந்து செல்லும்பொ ழுதெல்லாம் இனம் தெரியாத சோகம் மனத்தை வாட்டும். ஆனால்அன்று உறவாடிய வெயில் மட்டும் மாறாமல் இருக்கிறதே அது போதும் என்கிற சமாதானம் மட்டும் இன்னும் என் மனத்தில் இருந்துகொண்டே இருக்கிறது.

– வி.கே.லக்ஷ்மிநாராயணன்

சென்னை.

# புதுக் கவிதைகள்



சுட்டி காட்டுவது அக்கறையின்
வெளிப்பாடு
குத்தி காட்டுவது பொறாமையின்
வெளிப்பாடு

உடல் சோர்வை அம்மா
பொருட்படுத்துவது இல்லை
மனச்சோர்வை அப்பா
வெளி காட்டுவது இல்லை

உங்கள் வாழ்க்கையில்
உங்களுக்கு இரண்டு நபர்கள் தான்
நண்பர்கள்
ஒன்று கண்ணாடி மற்றது நிழல்

தவறு செய்யும் போது
மனம் யாரிடமும் யோசனை கேட்காது
தண்டனை கிடைத்து விட்டால்
எல்லோரிடமும் ஆறுதலை
எதிர்பார்க்கும்

கணவனின் கைகள்
அழுக்கு பட்டால் தான்
மனைவியின் கைகள்
மினுமினுக்கும்

படித்தாலும் புரியாதது பெண்கள்
படிக்கத் தவறிய புத்தகம் தந்தை
படிக்க விரும்புகிற புத்தகம் அன்னை
படித்ததும் பிடித்துப் போகும்



புத்தகம் மழலை
தொலைக்கக் கூடாத புத்தகம்
வாழ்க்கை

– நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி....


இலவச இதழ் www.panmugam.com
பண்முகம் .காம்

மின்னனு பண்முக இதழ்
PDF வடிவில் மாதம் இருமுறை

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi,
Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

நிர்வாக அலுவலகம்
Dheivam.com
HIG 215, K6, KALINGAVIHAR,
BHUBANESWAR, ODISHA - 751 019.

தொடர்பு கொள்ளவும்
7789941009



## இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

gsspecialfood.com



கீதாசமையல்

# gsspecialfood

## ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி

**தரமாக, சுத்தமாக, கலப்படமின்றி தயாரிக்கப்பட்டது.**

**எந்தவித இரசாயண கலவையும் பயன்படுத்தாமல் தயாரிக்கப்பட்டது**

(இட்லி பொடியில் பூண்டு சேர்க்காமல் தயாரிக்கப்பட்டது)

**சத்துமாவு**

41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது

**கருப்பு உளுந்து** கஞ்சிமாவு

**சின்ன வெங்காய வடகம்**

**புளிசாதப் பொடி**

**வெயிட் லாஸ் கஞ்சி மாவு**

வல்லாரை கீரை இட்லிபொடி

கறிவேப்பிலை இட்லிபொடி

தூதுவளை கீரை இட்லிபொடி

கொள்ளு இட்லிபொடி

முடக்கத்தான் கீரை இட்லிபொடி

எள் இட்லிபொடி

பூண்டு இட்லி பொடி

**நலங்கு மாவு**

35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது (வெயிலுக்கு குளிர்ச்சி தரும், பெண்கள் மட்டும்)

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள் கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ் செய்து பெற்றுக்கொள்ளவும்

gsspecialfood.com

**7550199561**

fssai REGISTRATION 22424543000080



# மீம்ஸ் கலாட்டா


ஏங்க.. மதராசி மூவி போலாமா..
ஒரு டிக்கெட் 300 ரூவா... 4 பேரு
போனா எப்படியும் 1500 காலி...
அதுக்கு ஏதாவது நல்லதா வாங்கி
சாப்பிட்டா வயிறாவது நெறையும்...
MATHESH...
நீங்க இப்பிடித்தான் சொல்லுவீங்கனு
எனக்கு முன்னாடியே தெரியும்ங்க..
அதான் ஸ்விக்கில லஞ்ச் ஆர்டர்
போட்டுட்டேன்... 10 நிமிஷத்துல
வந்துரும்..2000ரூபா pay பண்ணீருங்க..


தார் இருந்தா
தார் ரோடுன்னு சொல்லாறங்க
சிமெண்ட் இருந்தா
சிமெண்ட் ரோடுன்னு சொல்லாறங்க
அப்படினா...
MEMEES.IN
கவிதை ரசிகன் காமெடி
rasigank50@gmail.com
மீம்ஸ்♥கவிதை ரசிகன்
இரும்பு இருந்தா
இரும்பு ரோடுன்னுதானே சொல்லனும்
'தண்டவாள'முன்னு சொல்றாங்க?


எல்லாரும் நிலாவை வானத்தில
பார்த்துட்டு இருந்தாங்க..
MATHESH...
நான் மட்டும் அவ வாட்சாப்
டிபியில பார்த்துட்டு இருந்தேன்.


"செல்" இல்லைனா..! உயிரினமே
இல்லைனு, அறிவியல் டீச்சர் அப்போ
சொன்னப்ப புரியல..!
ஆனா இப்ப ரொம்ப நல்லாவே
புரியுது..!



# "தவிடுபொடியான கணவன் திட்டம்"

வீட்டின் பின்புறம் நின்று யாருடனோ மொபைலில் சன்னக் குரலில் பேசிக் கொண்டிருந்தான் சந்துரு.

அதை ஒட்டுக் கேட்கும் விதமாய் சமையலறை ஜன்னலருகே வந்து காதைத் தீட்டிக் கொண்டாள் ரூபிணி.

"ஆமாம்பா... என் பொண்டாட்டி கிட்ட ஒரு பெரிய கெட்ட பழக்கம் என்ன?...ன்னா கதவைச் சாத்தாமல் அப்படியே திறந்து விட்டுட்டுபக்கத்து வீட்டுக்கோ... எதிர் வீட்டுக்கோ... அரட்டை அடிக்கப் போயிடுவா!... அங்க போய் மணிக் கணக்கில் அரட்டையில் மூழ்கிடுவா.... நான் பல நாள் ஆபீசிலிருந்து வந்து பார்க்கும் போது கதவு திறந்திருக்கும் உள்ளே அவ இருக்க மாட்டா"

தன்னை பற்றித்தான் பேசுகிறான் என்பது தெரிந்ததும் கூர்ந்து கவனிக்கலானாள் ரூபிணி.

"நெனச்சுப்பாரு... பட்டப் பகல்ல... அதுவும் ஆள் இருக்கும் போதே வீடு புகுந்து கொள்ளையடிக்கிற இந்தக் காலத்தில் இப்படி லட்டு மாதிரி கதவை திறந்து விட்டுட்டு போயிட்டா என்ன நடக்கும்?"

எதிர்முனை ஏதோ சொல்ல,

"கரெக்ட்... அதைத்தான் நானும் நெனைச்சிட்டு இருக்கேன்... அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தால்தான் சிலதுக திருந்தும்... "ஷாக் ட்ரீட்மென்ட் ஈஸ் தி பெஸ்ட் ட்ரீட்மென்ட்"... அதனால அடுத்த தடவை நான் வரும்போது வீடு திறந்து கிடந்தா நானே சும்மாவாச்சும் பீரோவில் இருக்கிற துணிமணிகளை எடுத்து வீடு புராவும் இறைச்சுப் போட்டுட்டு... லாக்கரை திறந்து நகைகளை எடுத்து வேற இடத்தில் வெச்சிட்டு...

அதைக் காலி பண்ணிட்டு... பீரோவுக்கு பின் புறமாக ஒளிஞ்சுக்கப் போறேன்!.. எப்படியும் அவ வந்து துணிமணிகள் இறைந்து கிடப்பதையும்... லாக்கர் திறந்து கிடப்பதையும்... பார்த்துக் கத்துவா!... அந்தச் சமயத்தில் பீரோவுக்கு



பின்னாயிருந்து முகத்துக்கு கர்ச்சீப் கட்டிட்டு வெளியே வந்து அவ வாயை பொத்தி மிரட்ட போறேன்"

ஒட்டு கேட்டுக் கொண்டிருந்த ரூபிணி, "ஓஹோ... அப்படியா சமாச்சாரம் நீங்க எனக்கு ஷாக் டிரீட்மெண்ட் கொடுக்கப் போறீங்களா?... அதையும் பார்க்கிறேன்!" உள்ளுக்குள் நினைத்துக் கொண்டாள்.

மறுநாள் மாலை,

பக்கத்து வீட்டில் அரட்டைக் கச்சேரியை முடித்து விட்டு வீட்டிற்குள் வந்த ரூபிணி அறையெங்கும் துணிமணிகள் இறைந்து கிடப்பதையும்,லாக்கர் திறந்து கிடப்பதையும், பார்த்து சற்றும் அதிர்ச்சி இல்லாமல் 'எப்படா கணவன் வந்துவாயைப் பொத்து வான்?' என்று காத்திருந்தாள்.

பீரோவுக்கு பின்னாலிருந்து கர்சீப் கட்டிய முகத்துடன் வெளியே வந்தவன் ரூபிணியின் பின்புறமாய் அவளை கட்டிப் பிடித்து வாயைப் பொத்த, அந்தக் கையை விடுவித்த ரூபிணி, "ம்ஹும்... இந்த இறுக்கம் போதாது இன்னும் கொஞ்சம் இறுக்கி கட்டுங்க அத்தான்!" என்று சிரிப்புடன் சொன்னாள்.



அப்போதுதான் வாசல் கதவை தாண்டி உள்ளே வந்தான் சந்துரு.

அவனைப் பார்த்தவுடன் விழிகளை பெரிதாக்கிக் கொண்ட ரூபினி, "நீ... நீங்க... எப்படி... வெளியிலிருந்து?" கேட்டபடி தலையை திருப்பி பார்த்தவள் ஒரு உண்மை திருடனை நேரில்... அதுவும் அவ்வளவு குளோசப்பில் பார்த்த அதிர்ச்சியில் மயங்கி விழுந்தாள்.

அதற்குள் சுதாரித்துக் கொண்ட சந்துரு வெளியே ஓடும் என்ற அந்த திருடனைத் தடுக்க முற்பட்டான்.

பழுத்த அனுபவசாலியான அந்தத் திருடன் லாவகமாய் வளைந்து, குனிந்து, ஓடி வாசலுக்கு வெளியே தெருவில் இறங்கினான்.

அவனை துரத்திக் கொண்டு ஓடுவதா?... இல்லை ரூபிணியைக் எழுப்பி காப்பாற்றுவதா?" என்ற குழப்பத்தில் நின்ற சந்துரு,

"ரூபிணியைக் காப்பாற்றுவது தான் முக்கியம்" என்ற முடிவுடன் அவளருகே ஓடினான்.

– முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# தண்ணீர் சிக்கனம் தேவை இக்கணம்

சிக்கனமாக கையாள வேண்டிய விஷயங்களில் முக்கியமான ஒன்று தண்ணீர் ...காசு கொடுத்தாலாவது இப்போது கிடைக்கிறது இன்னும் ஒரு தலைமுறை தாண்டினால் அதற்கு வழி இல்லாமல் போய் விடுமோ என்கிற அளவு நம்மை பயமுறுத்துகிறது புள்ளி விபரங்கள் ...

நான் சின்ன பிள்ளையாக இருந்த காலத்தில் வீட்டுக்கு வீடு கிணறு உண்டு ...20 30 அடியிலேயே தண்ணீர் ஊற்றாக பெருகும் ...தண்ணீர் இறைக்க என்று ஆள் உண்டு .அவரை தண்ணீர் காரார் என்று அழைப்போம் .அவர் வாளியில் தண்ணீரை இரைத்து தொட்டிகளில் நிரப்புவார். எல்லா வீடுகளிலுமே கிணற்றின் பக்கத்தில் சிமெண்ட் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கும் .குளிக்கும் அறையிலும் சிமெண்ட் தொட்டியில் தண்ணீரை நிரப்புவோம் ..60களில் வீட்டுக்குள் குழாய் இருந்த நினைவு எனக்கு இல்லை .தண்ணீரை வாளியில் வைத்து புழங்குவோம்.

குழாய்கள் இல்லாத காரணத்தினால் தண்ணீர் சிக்கனமாகவே புழங்கப்பட்டது. என் அம்மா அரிசி கழுவும் தண்ணீரிலேயே காய்கறியை கழுவுவாள் ..அந்தத் தண்ணீர் மாட்டிற்கு கழுநீராக ஒரு மண் பானையில் சேகரிக்கப்படும்.



அதுபோல குளிக்கும் தண்ணீர் தோட்டத்திற்கு பாயும். துவைத்து அலசும் தண்ணீரை கூட புறவாசல் கழுவி விட..

நடைமிதி துவைக்க... பயன்படுத்துவர் எனக்குத் தெரிந்து தண்ணீரை வீணாக செல்ல வழித்தது அந்த காலகட்டத்தில் நான் அறியாதது.



அந்த அடிப்பம்பில் தண்ணீர் அடிக்கும் பழக்கத்திலும் தண்ணீர் சிக்கனமாகவே புழங்கப்பட்டது. எப்போது மோட்டார் வைத்து மேல் நிலைத் தொட்டியில் தண்ணீரை ஏற்றி வீடு முழுக்க குழாய்கள் வைத்து புழங்க ஆரம்பித்தோமோ அப்போதே தண்ணீர் சிக்கனம் காணாமல் போய்விட்டது.

இப்போது உள்ள காலம் மாற்றத்தில் அவசர உலகத்தில் இதைப் பற்றி எல்லாம் பேசினால் பழமைவாதி என்று முத்திரை குத்தி விடுவார்கள். தண்ணீர் ஏற்றுவது ஒரு வழி என்றால் இறக்கி செலவழிப்பது பல வழிகளில் ..

1978 இல் தென்காசி அருகே இடைக்காலில் மருத்துவராக என் கணவர் பணியாற்றிய போது அந்த கிராமத்தில் தண்ணீர் வசதி கிடையாது. கடுமையான உப்பு தண்ணீர். அதனால் மழை நீரை பாத்திரங்கள் வைத்து சேகரித்து அதை வடிகட்டி அதையே சமையலுக்கு புழங்குவோம்.1979 ல் சென்னையில் நாங்கள் இந்திரா நகரில் இருந்தபோது மொத்தம் நாலு வாளி தண்ணீர் மட்டுமே வரும். ஒரு நாள் முழுக்க புழக்கத்திற்கு அது தான். இல்லா விட்டால் ரோட்டில் அலைந்து திரிந்து தான் ஒரு குடம் தண்ணீர் எடுத்து வர வேண்டும்.

தண்ணீருக்கு பலவாறு கஷ்டப்பட்டதாலோ என்னமோ இன்றும் தண்ணீர் சிக்கனம் கடைபிடிக்க முடிகிறது .சிக்கனம் ஒரு பக்கம் என்றால் தண்ணீரை வீணாக்காமல் சேமிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும் ..எப்போதாவது அபூர்வமாகத் தான் நம்மூர்களில் மழை பெய்கிறது ..அந்த மழை நீர் சாலைகளில் ஓடி வீணாக போகும் போது மனம் கஷ்டப்படுகிறது. நிலத்தடி நீர் மட்டம் குறையும்போது நம் பொறுப்பு இன்னும் அதிகமாக வேண்டும் எந்தெந்த வழியில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த முடியுமோ அதை செய்ய வேண்டும்.

கல்யாண வீட்டில் சாப்பிடும் போது ஒருபாட்டில் தண்ணீர் வைத்தால் கூட அதை பாதிப்பேர் தொடாமலோ இல்ல பாதி குடித்து விட்டோ வீணாக்கும்போது மனசு கஷ்டமாக இருக்கிறது அதை கையில் நான் கையில் எடுத்து வர வெட்கப்பட மாட்டேன். பொதுவாக குழாய்களை திறக்கும் போது பாதி திறந்தாலே போதும்..மேலும் வீணாக்கும் தண்ணீரை வேறு எந்த விதத்திலாவது உபயோகப்படுத்திக் கொள்ளலாம் (கிச்சன் தரை துடைக்க.. கிச்சன் டவலை துவைக்க என ) சில அப்பார்ட்மெண்ட்களில் தண்ணீர் மறுசுழற்சி செய்யப்பட்டு செடிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது .

தண்ணீரை சிக்கனமாக செலவழிக்கும் போது அது வீட்டுக்கு மட்டுமில்லாமல் ஊருக்கே நல்லது. உணர்ந்து கொள்வோம் .

– தி.வள்ளி
திருநெல்வேலி.



# இசைக்கருவிகளே பயன்படுத்தாமல் உருவான சூப்பர் ஹிட் பாடல்

இசைக்கருவிகளே பயன்படுத்தாமல் ஏ.ஆர். ரகுமான் கம்போஸ் செய்த மாஸ்டர் பீஸ் பாடல் பற்றி தெரியுமா? இந்திய சினிமா வரலாற்றிலேயே இசைக்கருவிகளே இல்லாமல் பாடல் ஒன்றை உருவாக்கியது இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தான், அது என்ன பாடல் என்பது பற்றி பார்க்கலாம்.

மணிரத்னம் இயக்கிய ரோஜா படம் மூலம் தமிழ் திரையுலகில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஏ.ஆர்.ரகுமான். இளையராஜா கோலோச்சி வந்த கோலிவுட்டில் இசைப்புயலாக வந்து மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் தான் ரகுமான். முதல் படத்திற்கே தேசிய விருதும் வென்று அசத்தினார் ரகுமான். அதிலும் இளையராஜா உடன் அவருக்கு போட்டி இருந்தது. தேவர் மகன் படமா அல்லது ரோஜா படமா என்று இருந்த நிலையில், இறுதியில் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் ராஜாவை வீழ்த்தி விருதை தட்டிச் சென்றார் ரகுமான்.

ரோஜா படத்தின் தொடங்கிய இவரது வெற்றிப் பயணம் 30 ஆண்டுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தியாவின் நம்பர் 1 இசையமைப் பாளராக திகழ்ந்து வருகிறார் ரகுமான். அவர் கைவசம் டஜன் கணக்கில் படங்கள் உள்ளன. ஒவ்வொரு படத்திற்கு வித்தி யாசமான பல முயற்சிகளை எடுப் பதில் ஏ.ஆர்.ரகுமான் கில்லாடியாக இருந்து வந்துள்ளார்.



அந்த வகையில் அவர் இசைக்கருவிகளே இல்லாமல் இசையமைத்த ஒரு பாடல் பற்றி பார்க்கலாம்.

இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இயக்குனர் மணிரத்னம் காம்போ என்றாலே அது வெற்றி தான். அப்படி ரோஜா படத்தின் வெற்றிக்கு பின்னர் இவர்கள் இருவரும் இணைந்து பணியாற்றிய படம் திருடா திருடா. இப்படத்தில் பிரசாந்த் நாயகனாக நடித்திருந்தார். மேலும் ஹீரா, எஸ்பிபி, சலீம் கோஸ், அனு அகர்வால் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்திருந்த இப்படம் சிறந்த ஸ்பெஷல் எஃபெக்ஸுக்காக தேசிய விருதையும் வென்று அசத்தியது.

இப்படத்தின் பாடல்கள் அனைத்தும் பட்டிதொட்டியெங்கும் ஹிட் ஆகின. இதில் தான் இசைக்கருவிகளே இல்லாமல் ஒரு பாடலை கம்போஸ் செய்து ஒட்டுமொத்த திரையுலகையுமே வியப்பில் ஆழ்த்தி இருந்தார் ரகுமான். திருடா திருடா படத்தில் இடம்பெறும் ராசாத்தி என் உசுரு எனதில்ல என தொடங்கும் அப்பாடலை தான் இசைக்கருவிகளே இல்லாமல் இசையமைத்து இருந்தார் ரகுமான். இப்பாடலை ஷாகுல் ஹமீது பாடி இருந்தார். இசைக் கருவிகளே இல்லாமல் எப்படி சாத்தியம் என்று தானே யோசிக்கிறீர்கள். அதில் தான் ரகுமான் ஜீனியஸ் என்பதை நிரூபித்து இருக்கிறார். இசைக் கருவி கள் இல்லாவிட்டாலும் அக பெல்லா எனப்படும் கோரஸ் குரலை பின்னணிக்கு பயன்படுத்தி அப்பாடலை மெருகேற்றி இருந்தார் ரகுமான். இந்தியாவிலேயே இசைக்கருவிகளே இல்லாமல் இசையமைக்கப்பட்ட முதல் பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மீம்ஸ் கலாட்டா


நான் என்ன பேசினாலும்
மீம்ஸ் போடுறாங்கப்பா...
ஃபீல் பண்ணும் அமைச்சர் :(
-ஜெயக்குமார்
மீம் போடாத மாதிரி
பேசுங்க அண்ணே !!


எங்க வீட்டுக்கு திருடன்
வந்து நகை பணம் டிவி
எல்லாம் தூக்கிட்டு
போயிட்டான்!!
ATKVA
நான் அவ்வளவு
சொல்லியும் என்
ஸ்கூல் பேக் எடுக்க
மறந்துட்டான் பாவி...


macha nalaikku sem exam da
*Me
konja kuda bayame illa da padikkavu thonala da
*Dad
Koluthi_poduvoom
unaku epdi da bayama irukkum mavane
fees katrathu nanu da...


சாலையில் இரண்டு
பெண்கள் சந்திப்பு...



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

உங்கள் திருமணநாள் மற்றும் பிறந்த நாள்களை (பெரியவர்கள் மற்றும் குழந்தைகள்) நமது **தமிழ்நாடு இ-பேப்பர்.காம், வாத்சவ் சேனலுடன்** சேர்ந்து கொண்டாடுங்கள்...

பிறந்தநாள், மற்றும் திருமணநாளை
கொண்டாடுபவர்கள்
அவரவர்களின் புகைப்படத்துடன், பிறந்ததேதி,
வயது, மொபைல் எண், ஊர் பெயர்களை
எங்களுக்கு தெரியப்படுத்தவும்

உங்களைப் பற்றிய தகவல்களை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும் நமது தமிழ்நாடு இ–பேப்பர்.காம் மற்றும் வாத்சவ் சேனலிலும் புகைப்படத்துடன் வெளியிடுகிறோம்

**Whatsup no.8122664699**

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் 9337501889





சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்

அருள்தரும்
# தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்
அருள்தரும்
தெய்வம்
இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

■ 1 வருட சந்தா ரூ.399
■ 2 வருட சந்தா ரூ.699
■ 3 வருட சந்தா ரூ.999

பரிசை
அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்
PADMA MEDIA HOUSE
No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள
க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும்
மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு
கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!




தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**



# மாயன்களின்
## அதிசய ஆற்றல்கள்

மாயன் நாகரிகம் உலகின் பழமையான நாகரிகங்களில் ஒன்று. கி. மு. 2600 ல் தொடங்கி கி. பி. 900 வரை நீடித்த நாகரிகம். இது.

மாயன் நாகரிகம் அமெரிக்க இந்தியர் களிடையே நிலவிய நாகரிகம். இந்த நிலப் பகுதிகள், காலத்தின் போக்கால், அரசியல் மாற்றங்களால், இன்று மத்திய அமெரிக்காவில் ஐந்து நாடுகளாக இருக்கின்றன. அவை: மெக்ஸிகோ, கவுதமாலா, பெலீஸ், ஹோண்டுராஸ், எல் சால்வடார்.

மாயன் நாகரிகம் எந்தெந்த துறைகளில் எல்லாம் முத்திரை பதித் திருக்கிறது? உலக வரலாற்றுக்கு, மனித முன்னேற்றத்துக்கு, மாயன் நாகரிகத்தின் பங்களிப்பு என்ன?

சாக்லெட், கணிதம், வானியல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மாயர்கள் தொட்ட சிகரங்கள், இன் றும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

மாயன் நாகரிகம் கி. மு. 2600ல் தொடங்கி யது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அதற்கு முன்னால், மாயர்கள் எங்கே இருந்தார்கள்? மாயமாக, கி. மு. 2600 இல் ஒரு நல்ல நாளில் வானத்தில் இருந்து குதித்தார்களா?

### கடவுள் படைத்த பூமி

மாய நாகரிகத்தின் இதிகாசங்கள்பற்றி மட்டும் அல்லாமல், அவர்களுடைய மத நம்பிக்கைகள், வாழ்க்கை முறை போன்ற பல அம்சங்களை அறிய போப்பல்(Popol Vuh) என்னும் புத்தகம் உதவுகிறது. இதன் பொருள் சமுதாயத்தின் புத்தகம். உலகம் எப்படித் தோன்றியது, மக்கள் எப்படி வந்தார்கள் என்பதையெல்லாம் விளக்கும் பல கதைகள் ஆராய்ச்சியாளர்களுக்கு இதிலிருந்து கிடைத்திருக்கின்றன.

பல ஆயிரம், லட்சம், கோடி ஆண்டுகளுக்கு முன்னால், உலகில் மலைகள், நதிகள், செடி கொடிகள், பறவைகள், மீன்கள், மிருகங்கள், மனிதர்கள் என எந்த ஜீவராசிகளும் இல்லாத காலம். என்ன இருந்தது? வானமும், கடலும் மட்டுமே. உலகைப் படைத்தவர் கேட்ஸால் கோயோட்டெல் (Quetzalcoatl). இறக்கைகள் கொண்ட பாம்பு உருவம் இவருடையது.

தன்னை வணங்க, தன் புகழ் பாட யாருமே இல்லையே என்று இவர் நினைத்தார். தன் பக்தகோடிகளைப் படைக்கத் தொடங்கினார்.

“பூமி”என்றார் கேட்கோ. கடலுக்குள்ளி ருந்து பூமி எழுந்து வந்தது. மலைகளை அவர் மனதில்

நினைத்தார். பூமிப் பரப்பில் மலைகள் உயர்ந்தன. பிறகு ஒவ்வொன்றாக செடிகள், மரங்கள் படைத்தார். தான் படைத்த பொருட்களில் சோளச் செடிகளை அவருக்கு மிகவும் பிடித் தது. இதற்கு என்ன காரணம் என்று அவருக்கே தெரியவில்லை. அப் படி ஒரு பிரியம்!

அடுத்ததாக, மான்கள், புலிகள், பாம்புகள், பறவைகள் என்ற பல ஜீவராசிகளை கேட்கோ படைத்தார். இவை தங்க இடம் வேண்டுமே?

"மான்களே, பிற மிருகங்களே, நதிக்கரைகள் உங்கள் வீடு. பறவைகளே, மரங்கள் உங்கள் உறைவிடம். உங்கள் இனத்தைப் பெருக்குங்கள். உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கட்டும்" என்று எல்லா மிருகங்களையும், பறவைகளையும் ஆசீர்வதித்தார்.

கேட்கோவுக்குத் தன் படைப்புகள் பற்றி ஒரே பெருமை. இனி இந்த மிருகங்களும்,பறவைகளும் எப்போதும் தன் புகழ் பாடும் என்று நம்பினார்.

"மிருகங்களே, உங்களைப் படைத்த என் புகழ் பாடுங்கள்."விலங்குகளுக்குப் பேசத் தெரியாதே? அவை முனகின, கத்தின, ஊளையிட்டன.

பேசவில்லை.

"பறவைகளே, நீங்களாவது என் புகழ் சொல் லுங்கள்."

பறவைகள் குரல் எழுப்பின. குரல் இனி மையான குரல்! ஆனால் வார்த்தைகள் இல்லை.

கேட்கோவுக்குத் திருப்தி வரவில்லை.

"என்ன செய்யலாம்?" என்று யோசித்தார். பேசும் சக்தி கொண்ட உயிர்வகையை உருவாக்க முடிவு செய்தார். பூமியிலிருந்து களிமண்ணையும் மணலையும் எடுத்தார். அவை இரண்டையும் சேர்த்துக் குழைத்தார். தலை, முகம், கண்கள், காது, மூக்கு, கைகள், கால்கள் கொடுத்தார். முதல் மனித உருவம் பிறந்தது.

அந்த முதல் மனிதனைப் பார்த்தார்.

"ஐயோ, இவன் அழகாக இல்லையே?"

கடவுள் கையில் எடுத்தவுடன் அவன் உடைந்து போனான். அவர் யோசித்தார். களிமண்ணும் மண லும் சரியில்லை என்று முடிவு செய்தார். அவனை அழிக்கவேண்டும், இன்னொரு வகை உயிரைப் படைக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். இயற் கை நியதிப்படி கடவுளுக்குப் படைப்பது எளிது, அழித்தல் மிகக் கடினம்.

உலகம் இருட்டியது. வெள்ளம், பெரு வெள் ளம் வந்தது. பூமியைச் சூழ்ந்தது. முதல் பிரளயம் வந்தது. மண் மனிதனும், எல்லா ஜீவராசிகளும் மறைந்தார்கள்.

இனி மண் வேண்டாம், மரங்களால் மனித உருவம் செய்யலாம் என்று நினைத்தார். அவர் படைத்த மர மனிதன் அழகாக இருந்தான்.

"மனிதா, நீ பேசு பார்க்கலாம்."

மனிதன் பேசினான். பேச்சா அது? சுத்த உளறல். அவருக்கே புரியவில்லை.

மர மனிதனிடம் இன்னொரு முக்கிய குறை. அவன் வெறும் மரம்தான். அவனுக்கு உயிர் இல்லை. உயிர் இல்லாத இவன் தன்னைப்போல் மனிதர்களைப் படைக்க முடியாதே? உலகில் மனித இனம் பெருக முடியாதே?

கேட்கோ யோசித்தார். மறுபடி பிரளயம். மர மனிதன் மறைந்தான்.

"நான் படைக்கும் மனிதனுக்கு உயிர் இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் பேசுவான், தன் இனம் பெருக்க அவனால் முடியும். எதை வைத்து அவனைப் படைக்கலாம்?"

"நமக்குப் பிடித்த சோளத்தால் மனிதனைப் படைக்கலாமா?"

மனிதன் உருவானான். அவனைப் பார்த்த அவருக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

"மனிதா பேசு."

சோள மனிதன் பேசினான்.

"வானக் கடவுளே, உங்களுக்கு என் நன்றி."

"மனிதா, என் புகழ் பாடு."

பாடினான். தன் முயற்சியில் கடவுள் ஜெயித்து விட்டார். அவர் படைத்த இந்த மனிதனுக்கு உயிர் இருக்கிறது. தன் மனித இன எண்ணிக்கையை அவன் பெருக்குவான். அவனுக்குப் பேசத் தெரியும். அவன் கேட்கோவை நம்புவான், அவர் புகழ் பாடுவான். இதற்குத் தானே அவர் ஆசைப் பட்டார்?

கடவுளுக்கு மனம் நிறைந்த திருப்தி, மகிழ்ச்சி. "மனிதா, உனக்கு என் மனப்பூர்வமான ஆசீர் வாதங்கள் என்னை எப்போதும் நம்பு. பூமியை வாழ வை. நீ மிகச் சிறப்பாக வாழ்வாய்.'

கேட்ஸால்கோயோட்டெல் உலகத் தைப் படைத்தது இப்படித்தான், மனித வாழ்வு தொடங் கியது இப்படித்தான், என்கிறது மாய இதிகாசம்.



# இராக்கில் இந்து மதச் சுவடுகள்



இராக் என்று இப்பொழுது நாம் அழைக்கும் நாட்டில் உலகின் மிகப் பழமையான நாகரீகங்களில் ஒன்றான சுமேரிய பாபிலோனிய நாகரீகங்கள் இருந்தன. டைக்ரீஸ், யூப்ரடீஸ் என்ற இரு நதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசம் என்னும் பொருளில் இதை மெசபொடோமியா என்று அழைப்பர்.

இதைப் பற்றி பிரிட்டிஷ் மியூசியம் வெளியிட்ட அகராதியை Dictionary of the Ancient Near East published by the British Museum நான் ஆழப் படித்திருக்கிறேன். எந்த ஒரு தலைப்பை எடுத்தாலும் இந்து கலாசாரத்துடன் பல ஒற்று மைகளைக் காணமுடியும். இவைகளைப் பற்றி துலாபாரம், தகனம், இரு தலைப் பறவை, இந்திரன் வழிபாடு. லபிஸ் லசூலி ஏற்றுமதி முதலிய 20 கட்டுரைகள் எழுதி இருக்கிறேன்.

கடவுள் என்ற தலைப்பில் இந்த அகராதி தரும் விஷயங்கள் இந்து மதத்துடன் உள்ள அற்புத ஒற்றுமைகளைக் காட்டுகிறது. அவர்களும் கடவுளுக்கு 3000 பெயர்கள் வைத்திருந்தனர்!!

முதலில் சிலைகளுக்கு "கண் திறத்தல்" என்னும் அற்புத ஒற்றுமையைக் கண்போம். இந் துக் கோவில்களுக்குச் சிலை வடிக்கும் சிற்பிகள் அந்த சிலையின் கண்களைத் திறப்பதை மிகவும் முக்கியமானதாகக் கருதி அதற்கு விஷேச புனிதத்துவம் கொடுப்பர். இதை "நயனோன்மீலனம்" என்னும் வடமொழிச் சொற்களால் விவரிப்பர். சிலையின் கண்களைச் செதுக்கிவிட்டால் அதற்கு உயிரும் புனிதத்துவமும் வந்துவிடும். அதற்குப்பின் அது வெறும் கல் அல்லஷெ புனிதக் கடவுள்!! பின்னர் அதை ஜலத்திலும், தானியத்திலும் வைத்து மேலும் சக்தி ஏற்றுவர். அதற்குப் பின்னர், அதில் எண்ணை தடவ எல்லாப் பொதுமக்களையும் ஜாதி, குல வேறுபாடு இன்றி அனுமதிப்பர். இதே போல பாபிலோனியாவிலும் ஒரு சடங்கு உண்டு.

பாபிலோனியாவில் சிலை வடித்த பின்னர் செய்யும் சடங்கிற்கு 'வாய் திறத்தல், வாய் கழுவுதல்' என்று பெயர். இதைச் செய்தவுடன்



அந்தச் சிலைக்கு தெய்வீக சக்தி ஏற்பட்டுவிடும் என்று பாபிலோனியர் நம்பினர். அவர்கள் இந்துக் களாக இருக்கலாம். அல்லது நம்மிடம் இதைக் கற்றிருக்கலாம். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் உலகின் மிகப் பழைய சமய நூலான ரிக் வேதம் இந்துக்களுடையது. அதை கி.மு 6000 ஆண்டைச் சேர்ந்தது என்று சுதந்திரப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகரும் ஜெர் மன் அறிஞர் ஜாகோபியும் கூறுகின்றனர். அண்மை யில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிவரும் அமெரிக்கர்கள் அது கி.மு 1700 ஐச் சேர்ந்தது என்பர். எவ்வகையிலும் பாரினில் இதுபோல் பிரிதொரு நூல் இல்லை.

‘வாய் திறத்தலும்’, ‘கண் திறத்தலும்’ ஒன்றே. சில மொழிகளில் சில சொற்கள் இல்லாததால் வேறு உறுப்புகளைப் பயன்படுத்தி அதே கருத்தை வெளியிடுவர். ‘‘தமிழுக்கு முகம் இல்லை, சம்ஸ்கிருதத்துக்கு வாய் இல்லை’’ — என்று ஆன்றோர்கள் பகடி செய்வர். தமிழில் முகம் என்று சொல்ல முடியாததால் வடமொழிச் சொல்லான முகத்தையே பயன் படுத்துவர். சம்ஸ் கிருதத்தில் வாய் என்று சொல்ல முடியாததால் ‘‘முகத்தால் பேசினான்’’ – முகேன வதந்தி – என்பர். நான் தமிழ் ஒரு ‘‘இதயமற்ற மொழி’’ என்று சொல்லுவதுண்டு. தமிழில் இருதயம் என்பதற் குச் சொல் இல்லததால், ‘‘ஹ்ருதயம்’’ என்ற வடசொல் லையே பயன் படுத்துகிறோம். ‘ஹார்ட்’, ‘இதயம்’ ஆகியன எல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருந்து பிறந்தவை!

ஆக வாய் திறத்தல் என்று பாபிலோனியர் (சுமேரியர், மெசபொடோமியர்) சொல்வதெல்லாம் கண் திறக்கும் ‘‘நயனோன்மீலனம்’’ என்னும் சடங்கேயாம் என்று அறிக.

கடவுள் பற்றி பாபிலோனியர், சுமேரியர் சொல்வ தும் நம்மைப் போன்றதே. கடவுளைப் பல் பெயர் இட்டு அழைக்கலாம், பல உருவம் கொடுக்கலாம், ஆண், பெண் என்ற பல வடிவில் வணங்கலாம், அவருக்கு உருவம் கொடுத்து சிலை வைக்கலாம், கடவுளில் பெரியவர், சின்னவர், பரிவார தேவதைகள் வைத்து வணங்கலாம். கடவுள் மேலுகத்திலும், கீழ் உலகத்திலும் இருப்பார், அவர்களுக்கு வெவ் வேறு விஷேசப் பணிகள் உண்டு ஷ இப்படி அவர்கள் கூறுவது எல்லாம் இந்து மதத்திலும் உண்டு. அவர்கள் மொத்தத்தில் இதுவரை 3000 பெயர்களைக் கண்டு பிடித்ததாக பிரிட்டிஷ் மியூசியம் வெளியிட்ட அகராதி கூறும் நாமோ ஒவ்வொரு சாமிக்கும் 1000 – சஹஸ்ர நாமம் ஷ பெயர்கள் வைத்துள்ளோம்!!

இவ்வளவு பெயர்கள் இருந்தாலும் ‘‘கடவுள் ஒருவரே, அதை அறிஞர்கள் பலவேறாக அழைப்பர்’’ – என்ற மாபெரும் உண்மையையும் உலகின் மிகப் பழைய நூலான ரிக் வேதத்திலேயே செப்பியும் விட்டோம் (காண்க: ரிக் வேதம் (RV 1-164-46) – ‘‘ஏகம் சத், விப்ரா: பஹூதா வதந்தி’’ = ‘‘உண்மை ஒன்றே; அறிஞர்கள் அதைப் பல்வாறாக அழைப்பர்’’.

ஏன் மனிதன் பல கடவுளரை உருவாக்கினான்?

சக்தி என்று ஒரு பெண் தெய்வத்தை அழைப்போம். ஒரு பையன் வந்து, அப்பா, நான் பரீட்சையில் நல்ல மார்க் எடுக்க வேண்டும் என்று கேட்டால் அதை சரஸ்வதியாக வணங்கு என்போம். ஒருவர் பணம் வேண்டும் என்றால் லெட்சுமி என்னும் வடிவில் தியானம் செய் என்போம். மற்றொருவர் கோர்ட் வழக்கில் வெற்றி பெற்வேண்டும் என்றால் துர்க்கை என்று வழிபடு என்போம். இப்படியாக தெய்வங்களின் எண்ணிக்கை பெருகும். இன்னும் சில தெய்வங்கள் நடிகர் நடிகையர் மூலம் திடீரெனப் பிரபலமாகும். மூகாம்பிகை, ஐயப்பன், ராகவேந்திரர் முதலியோர் வழிபாடு பிரபலமானதைக் குறிப்பிடலாம். 100 ஆண்டுகளுக்கு முன் ஐயப்பன் கோவிலுக்குப் போனோர் தொகையை விரல் விட்டு எண்ணிவிடலாம். இன்று இரண்டு கோடிப் பேர் செல்கின்றனர். இப்படிக் காலத்துக்கு காலம் கடவுளர் பெருமை ஏறி இறங்கினாலும் கடவுள் ஒருவனே, அவனை எல்லா வகையிலும் வழிபட முடியும் என்ற மாபெரும் உண்மையை, கை நாட்டு வைக்கும் கிழவியும் கூட அறிவாள்.



வேறு கலாசாரங்களில் வெவ்வேறு இன மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் பல் தெய்வங்கள் இணைந்துவிடும். ஆனால் பல பெயர்கள் மட்டும் மக்கள் மனதில் தங்கிவிடும். மேலை நாட்டில் முதல் முதலில் நாகரீகத்தைப் பரப்பிய கிரேக்கர்களின் தெய்வங்களுக்கு இணையாக ரோமானியர்கள் ஒவ்வொரு தெய்வத்தின் பெயரைப் புகலுவர் மற்றும் புகழுவர்.

இதே போல இந்தியாவில் இருந்து வேத கால நாகரீகத்தை மேற்கு ஆசியா, ஐரோப்பா முழுதும் எடுத்துச் சென்ற 'ஹிட்டைட்ஸ்', 'காசைட்ஸ்', 'மிட்டனியன்ஸ்' ஷ நமது தெய்வங்களை அவர்களுடைய பழைய தெய்வங் களுடன் இணைத்தனர். இராக் மலைப் பகுதியில் வாழும் 'யசீதி' இனம் முதல் பல்வேறு இடங்களில் இந்துமதத்தின் எச்ச சொச்சங்களையும் மிச்சம் மீதிகளையும் காண்கிறோம். காஞ்சி பரமாசார்ய சுவாமிகள் 1932 ஆம் ஆண்டு சென்னைப் பிரசங்கத்தில் "உலகம் முழுதும் சநாதன தர்மமே இருந்தது, அதன் தடயங்கள்தான் இவை ஷ நாம் மதத்தைப் பரப்ப எடுத்துச் செல்லவில்லை, முன்னரே இருந்தவை" — என்று கூறுவதையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.



# சுடச்சுட செய்திகளை

## அதிகாலை வேலையில்

## தெரிந்துகொள்ள

# தமிழ்நாடு

## இ பேப்பர்.காம்

# தமிழ்நாடு இ/பேப்பர்

# படியுங்கள்

அரசியல்
நிகழ்வுகளை
விரல்நுனியில்
தரும்
ஒரே தரமான
நம்பர் 1
நாளிதழ்



# அமைதியே மருந்து

அந்த வீட்டுப் பெண் எப்போதும் வேலைப் பளுவின் காரணமாகவும், குடும்ப உறுப்பினர்கள் பற்றிய அக்கறையினாலும் ஒருவித பதற்றத் தோடேயே இருப்பார் எரிச்சலடைவார்.

ஆனால் ஒரு சில தினங்களாக பதற்றமோ, கோபமோ, எரிச்சலோ இன்றி அவர் அமைதியோடு காணப்பட்டார்.

ஒருநாள் அவரது கணவர், "நான் நண்பர் களோடு சேர்ந்து பியர் அருந்த போகிறேன்" என்று அந்த பெண்ணிடம் கூறினார். அவரும் அமைதியாக சம்மதித்தார்.

மகன் தனது தாயாரிடம் தயங்கியவாறு, "அம்மா நான் எல்லா பாடங்களிலும் பின் தங்கி இருக்கிறேன்" என்றான். அதற்கு அந்த பெண்ணும், "ஒழுங்காக படித்தால் உன்னால் முடியும். முடியவில்லை என்றால் மறுபடியும் அதே வகுப்பில் இருந்து படி" என்றார் அமைதியாக.

மகள் ஓடி வந்து, "அம்மா என் காரை விபத்துக்குள்ளாக்கி விட்டேன்" என்றாள்பதற்றத் தோடு. அதற்கு தாய், "கொண்டு போய் சரி செய்து விடு" என்றார்.

குடும்ப உறுப்பினர்கள் அவரின் அமைதியை கண்டு குழப்பம் கொள்ள ஆரம்பித்தனர். ஏதா வது மருந்துகளை பாவித்து தன்னை அமைதிப் படுத்திக் கொள்கிறாரோ என்று கவலைப்பட தொடங்கினர்.

ஒருநாள் அந்த பெண்மணியே அணை வரையும் அழைத்து அமர வைத்து பின் வருமாறு கூறினார்:

"சில உண்மைகள் புரிய எனக்கு நீண்ட காலம் எடுத்தது.

அதாவது அவரவர் வாழ்க்கைக்கு அவரவர் தான் பொறுப்பு. என்னுடைய கோபம், என்னுடைய பதற்றம், என்னு டைய பயம், என்னுடைய மன அழுத்தம், என்னுடைய தைரியம் எதுவும் உங்கள் பிரச்சினைகளை தீர்க்க போவதில்லை. அவை என் ஆரோக்கியத்தை கெடுத்து என் பிரச்சினைகளைதான் அதி கரிக்கும்.

என் அன்பையும், தைரியத்தையும் மட்டுமே உங்களுக்கு என்னால் கொடுக்க முடியும். உங்களுக்கு தேவைப்பட்டால் என் அறிவுரைகளை நான் தருவேன்.

உங்களுக்காக நான் கடவுளிடம் பிரார்த் தனை செய்வேன். ஆனால் உங்கள் வாழ்க் கையை நான் வாழ முடியாது. ஏனெனில் என்னை சார்ந்து நீங்கள் இந்த பிறவியை எடுக்கவில்லை. இது உங்களுக்கு கிடைத்துள்ள வாழ்க்கை.

உங்கள் பிரச்சினைகளுக்கு நீங்களே பொறுப்புக் கூறல் வேண்டும்.

உங்கள் பிரச்சினைகளை களைந்து உங்கள் சந்தோசத்தை நீங்களே தேடுமளவுக்கு நீங்களும் எல்லா அறிவையும் பெற்றுள்ளீர்கள். ஆகவே தான் நான் அமைதியாகி விட்டேன்."

குடும்பமே வாயடைத்து போய் இருந்தது.

அன்றில் இருந்து அந்த குடும்பத்தில் ஒவ் வொருவரும் பொறுப்போடும் சிறப்போடும் செயல் படத் தொடங்கினர்.

நாமும் கூட இவ்வாறான வாழ்க்கையே வாழ்கிறோம்.

குடும்பத்தில் ஒரு சிலவே அனைத்தையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுவதால் மன அழுத்தம் அவர்களை நோயாளியாக்கி விடுகிறது. நாம் அனைவரும் நம் பொறுப்பை நாமே பார்த்துக் கொண்டால் வாழ்வு இனிமையாக இருக்கும். ஆரோக்கியமும் கூடும்.



அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

SPECIAL OFFER

அபிமான உறவுகளே!

மாதம் இருமுறை வெளிவரும்
"அருள்தரும் தெய்வம்" இதழுக்கு இன்றே ஆண்டு
சந்தாதாரர் ஆகுங்கள்!"

ஒவ்வொரு இதழிலும் கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்லுங்கள்!

**வருட சந்தா ரூ. 399/ மட்டுமே**



**1st பரிசு ரூ.1000/**

**2 வது பரிசு ரூ.500/**

**3வது பரிசு ரூ. 250/**

மேலும் 10 நபர்களுக்கு, ஆறுதல் பரிசாக தலா, ரூ. 100 வழங்கப்படும்.

செப்டம்பர் 22ம் தேதி இதழுக்கான

**சிவனின் திரிசூலம்! வெறும் ஆயுதம் அல்ல... பிரபஞ்ச ரகசியம்**

இந்த தலைப்பு இடம்பெற்ற பக்க எண் கூறி பரிசு வெல்லுங்கள்

செப்டம்பர் 7ம் தேதி இதழுக்கான வெற்றியாளர்கள்



1st S.MANAS



2nd K.GANESAN



3rd SENTHILVELEN

முதல் மூன்று பரிசு வென்றவர்கள்

ஆறுதல் பரிசு வென்றவர்கள்

1.E. Karthikeyan, 2. P. Muthuraman, 3. K.Lakshmanan, 4.D. Deenadayalan, 5. R.Ramesh, 6.K. Suresh, 7. G.Raja, 8. A. Thilakaraj, 9. S. Arumugam, 10T. Jayalakshmi.

போட்டியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும்

கூடுதல் தகவல்களைப் பெற: 7092894609



தும்பிக்கை யானையின் பலம்!

நம்பிக்கை மனிதனின் பலம்!!

நாம் வாழும் வாழ்க்கையை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். நம்பிக்கை நமது மூன்றாவது கை. அதிகாலையில் ஆனந்தத்தோடு கடமை களை ஆரம்பிப்பவர்களிடம் கேட்டுப் பாருங்கள், சார் எப்படி இருக்கிறீங்க? எனக்கென்ன சூப்பரா இருக்கிறேன் என்பார்கள். அதே போல படுக்கையை விட்டு எழும்ப மனமே இல்லாமல் போர்வையை முகம்வரை இழுத்து போர்த்திக் கொண்டு படுக்கையில் புரளும் சோம்பேறிகளிடம் கேட்டுப்பாருங்கள்.. என்னத்த சொல்ல எதோ இருக்கேன் என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள்.

அதிகாலைப் பொழுது ஐந்து மணிக்கே வேப்ப மரத்தில் பறவைகளின் இனிய சங்கீதம் சூரிய உதயத்தை வரவேற்க புதுப் பொழுதை தரிசிக்கப் போகிறோம் என்ற பூரிப்பில் இனிய ராகத்தில் இசைப்பதை கேட்கும் போது மனம் லேசாய் நமக்கு சிறகடிக்கும். வானம் தூரத்தில் இல்லை தொடும் தூரத்தில் தான் உள்ளது என்று மனம் உணரும். ஆனந்தத்தில் அன்றைய பொழுது ஆரம்பிக்கும். காலை விழிக்கும் போதே தன்னம்பிக்கை உள்ளவர்கள் இறைவா இந்த நாள் இனிய நாளாய் ஆவதற்கு நன்றி என்பார்கள்.

தன்னம்பிக்கை இல்லாதவனிடம் உற்சாகம் இருப்பது இல்லை. முகத்தில் சந்தோஷ சுவடைப் பார்ப்பது அரிதிலும் அரிது. எப்படியோ.. இந்த நாளைக் கடத்தி விட்டோம். நாளைய பொழு தாவது நன்றாக அமையாதா? பார்ப்போம் என்பார்கள். அதில் கூட முழுமையான நம்பிக்கை இருப்பது இல்லை.

தன்னம்பிக்கை வளர்வதற்கு முதற் காரணியே தன்னை முழு மனதாக நேசிப்பது தான். நீ குட்டையோ நெட்டையோ கருப்போ சிவப்போ பலவானோ பலவீனனோ அப்படியே உன்னை ஏற்றுக்கொள். மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும் என ஒவ்வொரு மனிதனும் ஆசைப் படுகிறான். ஆனால் தன்னை நேசிக்க மறந்து விடுகிறான். மனிதன் பிறந்தவுடன் தன் தாயை நேசிக்கிறான். பிறகு தந்தையை. சிறிது நாளில் சகோதரர் சகோதரிகளை விரும்புகிறான். பள்ளிப் பருவத்தில் தனது அருகிலுள்ள மாணவனை நண்பனாக்கி அவனையும் நேசிக்கிறான். இளமை யில் வாழ்க்கைத் துணையை விரும்புகிறான். பின்பு பிள்ளை பேரன் பேத்தி என நேசிக்கும்



வட்டம் பெருகிக்கொண்டே போகிறது. அதுவும் பலம் தான். பிறரை கட்டுப்படுத்தாதவரை நாமும் நேசித்து, பிறரால் உண்மை அன்போடு நேசிக்கப்படும் பொழுது வானம்தொட்டுவிடும் தூரத்திலேயே இருப்பது போல் தெரியும்.

தன்னம்பிக்கை குறைபாடுகள் பெரும்பாலும் நான்கு காரணங்களால் வரலாம். நம்மைப் பற்றி பிறர் எண்ணுவார்களோ.. இக்கட்டான இச்சூழ் நிலையை எப்படி சமாளிப்பது என்ற அச்சம், எதிர்மறை சிந்தனை, மன அழுத்தம்.. நாம் சரி யான பாதையில் செல்கிறோம் என்ற தெளிவு ஒரு மனிதனுக்கு இருந்துவிட்டால், மற்றவர்கள் நம்மைப் பற்றி அதை நினைப்பார்களோ இதை நினைப்பார்களோ என்ற எண்ணம் வேரறுத்துப் போகும்.

உலகிலுள்ள அனைத்து மனிதன் முதல் பூமியில் உள்ள ஜீவராசிகள் அனைவருமே இக்கட்டான சூழ்நிலையில் தள்ளபடாதவர்களாக இருக்க முடியாது. இதை உணர்ந்தாலே துன்பக் கடலில் நீந்தி வெளியே வந்துவிடலாம்.

எதிர் மறை சிந்தனையை நேர்மறை சிந்தனையாக மாற்றுவது ஒன்றும் இமாலய சாதனை அல்ல. உங்களுக்குத் தெரியாத பல நல்ல விஷயங்கள் உங்களிடம் நிறைந்திருக்கும். முதலில் குறிப்பேட்டை எடுங்கள்.. உங்கள் நற்பண்புகளை நீங்கள் முதலில் பட்டியலிடுங்கள். நெருங்கிய நண்பர்கள் உறவினர்களிடம், என்னிடம் பிடித்த விஷயம் ஏதாவது உள்ளதா என்று கேட்டுபாருங்கள்.

அவர்கள் கூறுவதையும் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். பட்டியலிடும் விஷயம் நீண்டு கொண்டே போகும். அட இது நானா? என்று ஆச்சரியம் உங்களை வியக்க வைக்கும். பள்ளிப் பருவ இளம் வயது தோழர்களிடம் பேசுங்கள். பல மகிழ்ச்சியான விசயங்கள் நமது செவியில் இனிய பாடலாக ஒலிக்கும். நாவில் தேனின் சுவை ஊற்றெடுக்கும். இளம் பருவ நினைவுகள் பொன்னேட்டில் பொறிக்க வேண்டிய முத்துக்கள் என்பதை உணருங்கள்.

மன அழுத்தம் இன்று பரவலாக உலகில் நிறைந்துள்ளது. நோய்களில் எழுபத்தி ஐந்து சதவிதம் முதல் தொண்ணூறு சதவிதம் வரை மன அழுத்தத்தாலே வருகிறது. மன அழுத் தத்தின் காரணத்தை எளிதாகக் கண்டு பிடித்து விட இயலாது. ஏமாற்றம், தோல்வி பயம், வேலை இன்மை, வேலைப் பளு, இழப்பு, அதிக சத்தம், அதிக வெளிச்சம் இவை எல்லாம் கூட மன அழுத்தத்தை அதிகப்படுத்தும் காரணிகளாகும்.

மனஅழுத்தத்திலிருந்துவெளியே வர நமது எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து. யோகா, தியானம், தெய்வ சிந்தனை, நடைப்பயிற்சி போன்றவை மனதை மென் மையாக்கும்.

தன்னலமற்ற அன்புக் குழந்தைகளோடு பேசி விளையாடுவது, செல்லப்பிராணிகளோடுஅன்பாக விளையாடுவது ஆகியவை கூட மன அழுத்தத்திற்கு நல்ல மருந்து. அம்மணமாகப் பிறந்தோம். போகும் போது எதையும் தலையில் தூக்கிக் கொண்டு போகப் போவதில்லை. பின்பு ஏன் மனதை கசக்கிப் பிழிந்து அழுத்தத்தோடு வாழ வேண்டும்.

இரண்டு முக்கிய விஷயங்கள் உள்ளன. ஒன்று நம்மால் மாற்றவே முடியாத விஷயம் இன்னொன்று நாம் முயற்சி செய்தால் மாற்றக் கூடிய விஷயம். இதுவே மகிழ்ச்சியான வாழ்வுக்கு அடிப்படை. கருப்பாகப் பிறந்துவிட்டோம்.

குள்ளமாக இருக்கிறோம் என்று வருத்தப் படுகிறீர்களா? இதை மாற்ற இயலாது. எனவே அதை இறைவன் கொடுத்த பரிசாக முழுமன தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அதை மாற்ற நினைத்தால் வாழ்க்கை முழுக்க துயரம் மட்டுமே வரும். தண்ணி அடிக்கிறோம், புகை பிடிக்கிறோம் வேறு பல கெட்ட பழக்கத்திற்கு ஆட்பட்டு இருக்கிறோம் என்ற குறைகளெல்லாம் திருத்திக் கொள்ளக் கூடிய குறைகள். இதை திருத்தினால் பெயரும் கிடைக்கும் காசும் மிஞ்சும். என்னால் எதுவும் முடியாது என்று மட்டும் நினைக்காதீர்கள்.

நீ சிற்பி! ஏ.. சிற்பியே.. உன் கைவண்ணம் கல்லிலோ மரத்திலோ இல்லை. உன்னைதன்னம்பிக்கையால் அணு அணுவாகச் செதுக்குகிறாயே, அதிலுள்ளது நீ சிற்பமாகும் ஜால வித்தை. விழித்துப் பார்.. வானம் உன் பக்கத்திலேயே இருக்கும். அதை நீ தொட்டுத் தடவி முகர்ந்து அனுபவித்து மகிழலாம்.

# நிழலை தேடியல்ல நிஜத்தை தேடி ஓடுகிறேன்



கண்களை மூடி எனக்குள் பார்க்கிறேன். உச்சி மலையிலிருந்து, நதி வெள்ளத்தில் குதித்து, அடி ஆழத்திற்கு செல்வதை போல என்னை கிழித்துக்கொண்டு எனக்குள் செல்ல முயற்சிக்கிறேன். சுற்றிலும் கும்மிருட்டு சூழ்ந்திருப்பதை தான் என்னால் உணர முடிகிறது. நிச்சயமாக நான் எதை தேடுகிறேன் என்ற இலக்கு தெரியாமல், கைகள் சென்ற இடமெல்லாம் துழாவி துழாவி தேடுகிறேன். நெடுங் காலத்திற்கு முன்பே என்னில் இருந்து பிரிந்து போய்விட்ட அல்லது தொலைந்து விட்ட ஏதோ ஒன்று இங்கே நிச்சயமாக கிடக்கிறது. அதை தான் பிறந்த பிறகும், பிறப்பதற்கும் முன்பும் தேடிக்கொண்டே இருக்கிறேன்.

அம்மாவின் கருவறை நாலாபுறமும் கறுப்பாக, இருட்டாக இருக்கிறது. கதகதப்பை உணர்கிறேன். காகித படகு, மழை வெள்ளத்தில் மிதந்து செல்வது போல, கற்பபைக்குள் மிதந்து கொண்டிருக்கிறேன். என் சுவாசமும், உணவும் ஒரே வழியில் நடக்கிறது. மூடிய கண்களை திறக்க முடியாமல், ஜவ்வு படலங்கள் அழுத்துகிறது.

அம்மாவின் பெருமூச்சும், சிரிப்பொலி யும் காதுகளில்




விழுகிறது. அம்மா நடக்கும் போதும், சரிந்து படுக்கும் போதும் என் உள்ளங்கால்களில் குறுகுறுப்பு ஏற, எட்டி உதைத்து பார்க்கி றேன். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்துவிட மாட்டோமா? என்று எத்த னிக்கிறேன்.

இரத்தமும், நீரோடு வெளியே வந்து விழுகிறேன். என் சுவாச கோசம் முதல் முறையாக பிராணவாயுவை தொட்டு பார்ப்பதனால், முதல் மூச்சுக்கு வலி யெடுத்து அழுகிறேன். மருத்துவச்சி என்னை தலைகீழாய் தூக்கி முதுகில் ஓங்கி அறைகிறாள். முதல் வலி முதுகில் ஏறுகிறது. அந்த வலி மறைவதற்கு முன்பே ஆயிரம் வலிகள் சுமைகளாக எனக்குள் அழுத்த துவங்குகிறது. தாங்க முடியாத சுமைகள், சொல்லமுடியாத சோகங்கள், ஆனாலும் பெற்றவர்கள் என்னை துரத்து கிறார்கள். பாட சாலைக்கு போ வென்று ஆறுகளை, ஏரிகளை, அரச மரத்து நிழலை அனு பவிக்க முடியாமல், காகித குப்பைகளை தூக்கிக்கொண்டு வகுப்பறைக்குள் நுழைகிறேன் ஒரு கழுதை போல.

நான் நினைத்தபடி விளையாட கூட, எனக்கு அனுமதி இல்லை. கால்பந்தாட்டம் ஆடும் போது, கபடிக்கு போவென்று ஆசிரியர் தள்ளுகிறார். பம்பரம், கோலிகுண்டு, கில்லி, காற்றாடி போன்றவைகள் என்னை கவர்ந்து இழுக்கும் போது உட்கார்ந்து படியென்று அப்பா அதட்டுகிறார். படிக்க அமருகிறேன், நான் விரும்பியதை படிக்க முடியவில்லை. கம்பனையும், இளங்கோவையும், கண்ணதாசனையும் படிக்க நான் நினைத்தேன்.

மருத்துவனுக்கு படியென்று உறவும், சமூகமும் என்னை பிடித்து தள்ளியது. பாடசாலை துவங்கி ஆற்றங்கரை படிக்கட்டு வரை, தெருமுனை துவங்கி கல்லூரி வாசல் வரையிலும், எனக்குள் தொலைந்தது எதுவென்றே அறியாமல் காலங் கள் ஓடியது.

காதல் என்ற தேர், மனவீதியில் ஓடினால் சாந்தி என்ற தீபம் ஏற்றப்படும் என்று யாரோ சொன்னார்கள். அதை நம்பி வண்டுகளுக்கு காதல் ஓலை எழுதி காத்திருக்கும் பூஞ்சோலைக்கு சென்றேன். சென்றவன், அங்கு பூஜைக்கு பறித்த புதிய புஷ்பம் போன்ற அவளை கண்டேன். சூரியனை பார்த்த சூரியகாந்தி போல, சந்திரனை பார்த்த அள்ளி மலர் போல, ஒருவரை ஒருவர் கண்டதனால் சிலிர்ப்பு வந்தது. கருவில் தொலைத்த ஒன்று இவளிடம்தான் கிடைக்குமென்று நம்பி மணமேடை கண்டோம். கெட்டிமேள முழக்கத்திலும், புகையும் அக்னி ஜுவாலையிலும், நிதர்சனமான உண்மை ஒன்று தெரிந்தது. சுமைகளை இறக்கச்சென்ற இடத்தில், இன்னொரு சுமையை புதியதாக ஏற்றிக்கொண்டோம் என்பதை தாமதமாக உணர்ந்தேன். மாடி, மனை, குழந்தைகள் என ஆசைகளும், பொறுப்புகளும் அதிகரித்ததே தவிர இதயம் கேட் டுக் கொண்டே இருந்த

கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை தெளிவும் பிறக்க வில்லை.

நாடி தளர்ந்து விட்டது. நரம்புகள் ஓய்ந்து விட்டன. சதைகள் சுருங்கி போய்விட்டன. புலன்களும் சக்தி குறைந்து கொண்டே வருகிறது. தூரத்தில் யாரோ தெரிவது போல் மரண தேவனும் காட்சிதருகிறான். நீண்ட நெடிய பயணம் முடியப்போகும் நேரம் நெருங்கி விட்டது. இன்னும் சில நாட்களே அல்ல, சில மணி நேரமே அதுவும் அல்ல, சில வினாடிகளே பாக்கி இருக்கிறது இப்போதாவது நான் தொலைத்தது என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இன்று தெரியவில்லை என்றால், மீண்டும் நான் கல்லறையில் இருந்து கர்ப்பபை நோக்கி பயணிக்க வேண்டும். இன்னொரு முறை பிறக்க என்னால் முடியாது. அதற்குள் எதை தொலைத்தேன் என்று தேடியே ஆக வேண்டும்.

அன்னையை கேட்டேன்! அவள் சிரித்தாள். தந்தையை கேட்டேன் அவரும் சிரித்தார். கட்டிய மனைவியை, பெற்ற பிள்ளையை, உற்ற சொந்தங்களை அனைவரையும் கேட்டேன். மௌனம் ஒன்றையே பதிலாக தந்தார்கள்.

அறிஞர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள் அவர்களின் படைப்புகள் அனைத்தையும்புரட்டினேன். எதிலுமே நான் தொலைத்தது என்னவென்று தெரியவே இல்லை. பசிக்காக அலையும் அங்காடி நாய் போல, கருத்தில் பட்ட இடமெல்லாம் சுற்றிச்சுற்றி வந்தேன்.

எங்கேயும் எனக்கான விடை கிடைக்கவே இல்லை. எதையோ தொலைத்தேன் என்கிறாய். அது எங்கேயும் இல்லை என்கிறாய். ஒருவேளை நீ எதையும் தொலைக்காமல், தொலைத்ததுபோல, நினைவு தடுமாறி அலைந்து கொண் டிருக்கிறாயா? யாரோ ஒருவர் கேட்பது காதில் விழுகிறது.

அப்படியா? நான் எதையும் தொலைக்கவில்லையா? வெறும் கானல் நீரை தேடியா? இதுவரை ஓடி கொண்டிருக்கிறேன். நெஞ்சத்தை கிழித்து வைத்து ஆராய்ந்து பார்க்கிறேன். இல்லை இல்லவே இல்லை. நான், இதுவரை நிழலை தேடி ஓடவில்லை. நிஜமாகவே தொலைந்து விட்ட ஒரு நிஜத்தை தேடித்தான் ஓடிக்கொண்டே இருக்கிறேன். எனக்கு கலக்கம் இல்லை. மயக்கமில்லை, தடுமாற்றமும் இல்லை. நிச்சயம் ஏதோ ஒன்று என்னிடமிருந்து தொலைந்து விட்டது. இன்று அது என்னோடு இல்லை. என்றாலும் என்றோ ஒருநாள் ஆதியில் அது என்னோடு இருந்தது. அல்லது நான் அதனோடு இருந்தேன் அதில் மாற்றமில்லை.

நான் அதனோடு இருந்தேன் என்றால், நான் எங்கிருந்து வந்தேன். இனி எங்கேபோகப் போகிறேன். நான் புறப்பட்ட இடத்தை எப்போது சென்றடைவேன்? அது தெரிந்தால் நாம் தொலைத்தது என்னவென்று நிச்சயமாக தெரிந்து விடும்.

ஆமாம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நான் எங்கிருந்து வந்தேன். எங்கே போகப்போகிறேன். என் துவக்கம் எது? என் முடிவு எது? அட அதுவெல்லாம் இருக்கட்டும். முதலில் நான்என்பது எது? என் உடம்பா? என் மனசா? என்உணர்வா? நான் யார் என்பதை தெரிந்தால்தானே என்துவக்கமும் முடிவும் இன்னதென்று அறிய முடியும்?

மரண தேவன் என் விழிகளின் மீது அழுத்தமாக அமருகிறான். என் நாசிகளை



இறுக மூட பார்க்கிறான். என் செவிகளை செவிடாக்கி விட்டான். என் நாவுக்கு பேசும் சக்தியை இல்லாது செய்துவிட்டான். உடலை அசைக்க முடியவில்லை. ஆனாலும், எனக்குள் இருக்கும் நான் தூரத்தில் வெகுதூரத்தில் ஒரு வெளிச்ச புள்ளியை கூர்மையாக பார்க்கிறேன். சின்னஞ்சிறிய புள்ளி நான் பார்க்கும் போதே பெரிய வட்டமாகிறது. வட்டம் மலையளவு விரிந்து காணும் இடமெல்லாம் அதுவன்றி வேறு இல்லை என்றாகி விடுகிறது. அந்த பெரிய வெளிச்சத்தில், நான் ஒரு புள்ளி வெளிச்சமாக தெரிகிறேன். காந்தத்தை நோக்கி செல்லும் இரும்பு துண்டாக ஈர்க்கப்படுகிறேன். யாரோ என்னை பிடித்து தள்ளுகிறார்கள். பாதளத்தில் கிட என்று அழுத்தி எறிகிறார்கள். மீண்டும் அழுகிறேன். என் சுவாச கோசத்தில், புதியகாற்று, மருத்துவச்சியின் புதியஅடி, மீண்டும் என்னிடமிருந்த ஏதோவொன்று தொலைந்து விட்டது...



அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

## அருள்தரும் தெய்வம்

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com










எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

**சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,**

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், **நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,**




**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com